# செழுங்கமலச்

# சிலம்பொலி

708

708

JPL
C708

க. வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செழுங்கமலச் சிலம்பொலி

க. வீரகத்தி

வாணிகலைக்கழகம்
கரவெட்டி
1970

KOHA JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4808.8111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணிக்கை

"வாணியெனுந் தோணியிலே வாழ்க்கைப் பெருங்கடலில்
ஞான உலாவருவேன் நான்."



என்னிதயத் தூடுருவி ஏதம் செய்த
எரிபண்பு(க்) களையெல்லாம் அறக் களைந்து
தன்னரிய தியாகத்தால் நோன்பி னாலே
தண்மையுறச் செய்துவிட்ட பெண்மைத் தெய்வம்!
பொன்னனைய புதல்வர்க்குப் பொலிவை யூட்டிப்
புகழ்விளக்கம் தந்துநிற்கும் மனை விளக்க
என்னருமை மனைவிக்கு இது காணிக்கை
இளமுருகின் சிலம்பொலியும் இதனை வாழ்த்தும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

நிகழும் சாதாரண வருடம், மே மாதம் 27ஆம் திகதிக்குப் பின்பு சோஷலிசம் பேசுகின்ற, பேசப் பிரயத்தனப்படுகின்ற திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர் அல்லர் நண்பர் வீரகத்தி. ''பிறந்து மொழிபயின்ற பின்னரெல்லாம்'' அவர் பேசுவதும், எழுதுவதும் சமுதாயம் சமதருமப் பூங்காவாக மலர்தல் வேண்டும் என்பதே. சோஷலிச சமுதாயத் துடிப்பு அவரின் இயற்கையான இதயத்துடிப்பு ஆகும். ஆனால், சடவாதிகளி லிருந்து விலகி, தெய்வீக சோஷலிசக் கொள்கை வழிச் செயற்படுபவர். அவர் மொழியிற் கூறுவதாயின், ''ஆத்திகம் பேணும் அபேதம்'' அவர் காணும் நெறி என்க.

சமுதாயம் சமதருமப் பூங்காவாக மலர்ச்சியும் மணமும் எய்திப் பொலிந்திடல் வேண்டும் என்ற புனித இலட்சியம் நிறைவுறுதற்கும் தெய்வத் திருவருளையே வேண்டி நிற்கின்றார் வீரகத்தி. அல்லும் பகலும் அகமுருகி அருச்சனை செய்யும் செந்தமிழ்த் தெய்வம் முருகனைச் சரணடைந்துள்ளார். இதனால், ஈழத்தின் ஆறுபடை வீடுகளென அவர் கருதிக் கொண்ட கதிர்காமம், சந்நிதி, நல்லூர், மாவிட்டபுரம், கந்தவனம், சித்தாண்டி (மட்டக்களப்பு) என்னும் திருத்தலங்களிலும், கரவைத் தாளங்குழி, மயிலிட்டி காசநோய் (இவ்வைத்தியசாலையில் நெஞ்சுநோய்ப் பரிசோதனைக்காக இருநாட்கள் தங்கியிருந்தவர்) வைத்தியசாலை, பேராதனைப் பல்கலைக்கழகக் கோயில்களிலும் குடிகொண்டுள்ள முருகனை, நெஞ்சு நெகிழ்ந்து, ''தான்கலந்து'' பாடுகிறார். சோஷலிச சமுதாய அமைப்பை, தமிழாற் கொஞ்சி, முருகனைக் கெஞ்சிக் கேட்கின்றார்.

இளமுருகின் எழில்பாடும் கவிதைகளில் எல்லாம் அவரின் இதயத் தாக்கமும் ஏக்கமும் தெரிகின்றது. அதுவே சமுதாயத்தின் தாக்கமும் ஏக்கமும் ஆகின்றது. பாடல்கள் இதயத்தைத் தொடுகின்றன; உள்ளத்தை ஊடுருவுகின்றன; உணர்ச்சி நரம்புகளைத் தாக்கி மனிதனைச் செயற்பாட்டுக்குத் தூண்டுகின்றன. மேலும் முருகன் காதலையும் விளைக்கின்றன.

வீரகத்தி கவிதைகளில் நளினம் உண்டு, நடை நாகரிகம் உண்டு. கருத்தாழம்பயிலும், சொல்லழகு தவளும். புத்தம் புது உவமைகள் பூத்துக் குலுங்கும். இண்டலும் நையாண்டியும் கூட நமது உணர்சிகளைக் கிளறும். மனிதன் கட்டாயமாக அநுபவிக்க வேண்டிய கவிதைகள் வீரகத்தி கவிதைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செழுங்கமலச் சிலம்பொலிக் கவிதைகள் 1965–66 ஆம் ஆண்டுகளில் செய்தி இதழ்களிலும், நினைவிதழ்களிலும், ஆண்டுமலர்களிலும் வெளிவந்தவை. இக்கவிதைகளில் பேராதனைப் பல்கலைக்கழக முருகன் பாடல்களே இறுதியானவை; பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முருகன் கோயில் கண்டுள்ள அன்று பாடப்பட்டவை. இவற்றையெல்லாம் தொகுத்து ''வாணி'' செயலகத்தில் பத்திரமாகப் பாடம் போட்டு வைத்திருந்தார்கள் வாணி கலைக்கழக மாணவர்கள்.

தற்செயலாக இதனைக் கண்ணுற்ற யான் மனம் வேதனைப் பட்டேன். சிலம்பொலி தமிழ் மக்கள் அனைவர் செவியிலும் ஒலித்தல் வேண்டுமெனத் துடித்தேன். பிரதிகளைத் தூக்கிக் கொண்டு நேரே நண்பர் ஆசீர்வாதம் அவர்களிடம் சென்றேன். இது நடந்தது 1967 ஆம் ஆண்டு ஆவணி* விடுமுறையில். பின்பு அந்தப் பக்கம் தலைகாட்டவே இல்லை. எதுவும் ''பருவத்தால் அன்றிப் பழா'' அல்லவா ?

வீரகத்தி ஒரு வீரசக்தி. ஆனாலும், இன்று சக்தி பிரிந்த சஞ்சலத்தில் கணந்தோறும் சாகின்றார். இந்த நிலையில் செழுங்கமலச் சிலம்பொலி நினைவுக்கு வரவே, திரு. ஆசீர்வாதம் அவர்களை அணுகினேம். மனிதன் புன்முறுவலுடன் வரவேற்றார், கவிதைப் பிரதிகள் இருக்குமோ இல்லாமற் போயிருக்குமோ என்ற ஏக்கத்தில் 'முளிசிய' நமக்கு, அந்த அழகிய முறுவல் ஆறுதல் தந்தது. சுமார் மூன்று ஆண்டுகளாகச் செழுங்கமலச் சிலம்பொலியைப் பேணி வைத்திருந்த அப்பெருமகனுக்கு எப்படி நன்றி கூறுவதென்றே தெரியவில்லை. தமிழ் வாழ்வதற்காக அவர்கள் நீடு வாழவேண்டும்!

தெரியாத நிலையிலேயே, 'செழுங்கமலச் சிலம்பொலி' அனைவர் சிந்தையிலும் செவிகளிலும் ஒலிக்கப்போகின்றது.

தனக்கும் 'ஆறுபடை வீடு உண்டெ'னப் புளகாங்கிதம் கொள்ளும் வீரகத்தியுடன் சேர்ந்து, நமக்கும் 'ஆறுபடை வீடு உண்டு' என்று நாம் இனிப்பெருமைப்படலாம்.

வாழ்க, வளர்க, முருகன் செழுங்கமலச் சிலம்பொலி !

வணக்கம்.

''தொல்லகம்'' குக. வயிரவனார்
புலோலி தெற்கு,
பருத்தித்துறை. 6–5–70

---

* 'காசம் நாசம் செய்யாதே,' 'வரமே தருக வருகவே' என்ற இரு பதிகங்களும் இதற்குப்பின் பாடப்பட்டவை. இவையும் இத்தொகுப்பில் இடப்பெற்றது சுணக்கத்தால் ஏற்பட்ட நன்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

வணக்கம்

—கூடும் அன்பினிற் கும்பிடுக.—

க. வீரகத்தி

''வாணி''
கரவெட்டி.
6-4-70

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செழுங்கமலச் சிலம்பொலி

**பொது :**

கந்தன் கருணை
கறைத்துணியோ வினையுடலம் ?
வல்லவன் பாதமே வாழ்வு வழங்கும் !
கந்தனை முத்தமிடும் !
குமர லீலை
ஒரு மனிதற் கொரு நீதி ?
வேலியே பயிரை மேய்ந்தால் ?
எல்லாம் நீயே !
செழுங்கமலச் சிலம்பொலி !

**கதிர்காமம் :**

கங்கையிற் பாதி – கந்தனிற் பாதி'
அடியேன் ஆறு(ம்) படைவீடு !
ஆறுமுகமான பொருள்

**சன்னிதி :**

மனித்தப் பிறவியும் வேண்டுவதே !
சன்னதி என்னிதி !
எல்லோரும் இன்புற்றிருக்க...
சிந்தனை என்ன செய்யும் ?
கந்தன் காதலே காதல் !
கோடிமுறை பாடும் குமரன் !

**நல்லூர் :**

வேறுமோர் போருண்டு வேலெடுப்பாய் !
சோற்றுப் படைக்கோராற்றுப்படை !
வாழ்வாங்கு வாழ !

**மாவிட்டபுரம் :**

வேறேதும் யான் வேண்டேன் !
சுட்டபழ வேடிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தவனப் :

யாரோ சிரிக்கார் ?

ஐவர் பழிதீர

புலோலி உபய கதிர்காமம் :

கடற்கரைத் தாழங்கனி ?

சித்தாண்டி :

கிழக்கொளித் தீபம் !

கரவைத் தாழங்குழி முருகையன் :

பாவாடையாட்சி ?

குதித்துப் பாய்ந்த திருவடி !

மயிலிட்டிக் காசநோய் வைத்தியநாத முருகன்

காசம் நாசம் செய்யாதே !

பேராதனைப் பல்கலைக்கழக முருகன் கோவில்

வரமே தருக ! வருகவே !

ஆனந்தக்களிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செழுங்கமலச் சிலம்பொலி

## கந்தன் கருணை !

**இராகம் :** சாமா **தாளம் :** ஆதி

பல்லவி

கந்தன் கருணை கலியுகப் புதுமை !
வந்தனை செய்வோம் வாழ்வு மலரும் !

அனுபல்லவி

நிந்தை தீர்க்கும் விந்தை சேர்க்கும்
நிகரி லாத நிறைவை யாக்கும் (கந்)

சரணம்

பிஞ்சு முகமும் பெரிய விழியும்
கொஞ்சி யபயம் கூறு கரமும்
நஞ்சை யுமிழும் ஆண வத்தைத்
துஞ்ச வைக்கும் வேலு முடையான் (கந்)

கொடியி லிடையைக் கொள்ள வைத்துக்
கோங்க ரும்பு கொங்கை யாக
வடிய வடிய அழகை வைத்த
வள்ளி காதல் துள்ளு முள்ளக் (கந்)

கலியு கத்திற் கான மூர்த்தி !
கயமை தீர்க்கும் ஞான மூர்த்தி !
மதுமி குந்த கவிதை மொட்டு
மலர மொய்க்கும் வண்டு மாவன் (கந்)

ஏழை யுள்ளம் நீல மயிலை
எந்த வகையில் ஒக்கு மோதான் ?
வாழ ஏழை வரஞ்சொ ரிந்து
வாதை தீர்க்கும் நாதமூர்த்தி ! (கந்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறைத்துணியோ வினையுடலம் ?

பல்லவி

தீவினை போகுந்நாள் – முருகா ! என்
சாவினைக் காண் நாளோ ? (தீவினை)

அநுபல்லவி

ஓவிய மாகநீ ஒன்றுமே பேசாதென்
சீவிய பரியந்தம் கோபித் திருந்திட்டால் (தீவினை)

சரணம்

துணியிற் படுகறை துணியுடன் போதல்போல்
துன்பந் தருவினை தூய்மை யிலாவுடல்
தணியப் படும்வரை தரித்திரம் செய்யுமேல்
தயாநிதி யேயுன் தலைமையென் னுகுமோ ? (தீவினை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லவன் பாதமே வாழ்வு வழங்கும் !

(செஞ்சுருட்டி) (ஆதி)

பல்லவி

பகவனை யனுதினம் வேண்டு – வாழ்க்கைப்
பாலை பசுஞ்சோலை யாகும் – நீ (பக)

அநுபல்லவி

தகுதியும் செம்மையும் அன்பும் தந்து
தரணியை நாளுள வேண்டு மென்று. (பக)

சரணம்

துன்ப இருளிலே யன்று இன்பம்
துள்ளும் பகலிலும் தொழுதிடு தீய
வன்பு மிகுந்த வையகத் தென்றும்
வல்லவன் பாதமே சாந்தி வழங்கும் (பக)

நல்லது செய்யா தொழியினும் நாடி
அல்லது செய்யாத ஆண்மையை வேண்டு
அல்லும் பகலுமெப் போதுமே ஐயன்
அம்புய மேயுனக் கானந்தம் நல்கும் (பக)

வல்லவன் பம்பரம் வரம்பிலு மாடும்
வன்மையை வேண்டுயர் வண்மையை வேண்டு
நல்லவர் சாவது நானிலத் தில்லை
நன்மையைக் கேள்பெருந் தன்மையைக் கேள்நீ (பக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தனை முத்தமிடும்!

இன்பம் அனைத்தும் தந்து புறந்தரும்
எந்தை யிளமுருகன் – நான்
நொந்து தொழுமுருகன்
துன்பம் பிணிதுயர் யாவும் தொலைந்திடத்
துள்ளி யருளமரன் – அழகுக்
கொள்ளை யிளங்குமரன்!

கோடானு கோடி சூரியப் பேரொளி
கொண்டதமிழ்க் குரவன் – சூரை
வென்ற தமிழ்விரகன்
மாயாத கனவு நனவாய் மலர்ந்திட
மகிழ்ந்து வரந்தருவான் – உளம்
நெகிழ்ந்து கரந்தருவான்!

பேயொடு கூடிநின் றுலு மெனைக்கண்டு
பேணி யருள்பொழிவான் – நான்
நாணி மருள் தெளிவேன்
தாயொடு தந்தையாய்த் தன்னந் தனியனைத்
தாவி வருவேலன் – தமிழ்
கூவி வரு பாலன்!

நீல மயில்வரு நித்திலக் குன்றமென்
நெஞ்சைக் கரைத்துவிடும் – வஞ்ச
நஞ்சைத் துரத்திவிடும்!
கோல விசும்பிடை வெள்ளிகள் போல்விழி
கொஞ்சும் எனைக்கொஞ்சும் – வினை
அஞ்சும் எனக்கஞ்சும்!

ஆறு முகங்களும் பன்னிரு கண்களும்
காணப் பழிபறக்கும் – மனம்
பேண ஒளிபிறக்கும்
தேறல் கலந்த தினைமாவினை யென்றும்
தேற்றிக் கொடுத்திடுவேன் – அன்பின்
ஊற்றைப் பிடித்திடுவேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டில் ஒலியெனக் காரிருள் மின்னெனக்
கைதந்து காத்திடுவான் – பன்னிரு
கைதந்து காத்திடுவான்
பாட்டின் சுவையெனப் பாலில்வெண் ணெய்யெனப்
பாரில் ஒளித்திடுவான் – உண்மை
தேரில் பிழைத்திடுவோம்!

இன்னறும் பால்கனி ஏதுமே வேண்டலன்
அன்பு வேண்டுகின்ருன் – இதயப்
பண்பு வேண்டுகின்ருன்
மன்னவன் முருகன் மாமலர்ப் பங்கயம்
மகிழ்ச்சி கொடுக்கின்றது – மாற்ருர்
இகழ்ச்சி கெடுக்கின்றது!

புன்சிரிப் பொன்றுமே போதும் எனதுளம்
பொன்னென மாற்றுயரும் – அது
மின்னலின் ஆற்றல் பெறும்
நன்செய் நிலன்விளை நென்மணி யாகவே
சிந்தனை முத்துதிரும் – அது
கந்தனை முத்தமிடும்'

KOHA JPL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமர லீலை

இராகம் : சிந்துபைரவி தாளம் : (கண்டகதி)ஏகம்

பேரா யிரங் கொண்ட பாலன்! – தமிழ்த்
தாயாகி நின்றெமைத் தாங்குதனி வேலன்!
பாராதி யண்டங்கள் யாவும் – அவன்
பார்வையில் வரிசையாய் வந்துநின் றுடும்!

பால்மணம் மாறுத பையன்! – இளம்
பச்சைமயில் மீதிலே பவனிவரும் ஐயன் !
வேல்நிதந் தாங்கிடும் கையன்! – நால்
வேதங்கள் புகழ்பாடி ஏத்திடும் மெய்யன்!

மாம்பழக் கன்னங்கள் மலரும்! – அருள்
மாறுத பதுமவிழி பரிவுறச் சுழலும்!
நாம்வணங் கத்துயர் தளரும்! – பெரு
நன்மைகள் பிறைபோல நாடோறும் வளரும்!

அம்மாவுக் கதிகமவன் செல்லம் – அருமை
அண்ணனுக் குந்தம்பி அன்புமிகு வெல்லம்!
சும்மா இருக்கவே மாட்டான் – எங்கும்
சுற்றுலா வருதலே முருகுதிரு வுள்ளம்!

அறிவாளி அண்ணனுக் கெதிராய் – உலகை
அதிவேக மாய்வலஞ் சுற்றிவந் திட்டான்
பறிபோன மாம்பழங் கண்டான் – மனம்
பதைத்தான் வெகுண்டான் படலை திறந்தான்!

கோவணத் தாண்டியாய் விட்டான் – குமரன்
குன்றுதோ றுடிவேல் கொண்டுமகிழ் வுற்றுன்
தாவணங் கட்டாத காளை – குமரன்
தன்னிச்சை யானதோர் பிரணவப் பாளை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றுதோ றுடிவரு வேளை – குமரி
குறவள்ளி கண்களிற் கண்வைத்து விட்டான்
அன்றுதொட் டாறுமுக சாமி – வள்ளி
அழகுடல் தழுவுதற் கரும்பாடு பட்டான்!

குறவர்குல மாயினுங் கோதை – கந்தன்
கூத்துக்கு அவள்தாளம் போட்டாளோ இல்லை
மறநம்பி வில்லம்பு கொண்டான் – கந்தன்
மரவேங்கை யாய்முற்றம் மதிகோண நின்றான்!

காதல்தலைக் கேறியது கந்தன் – விசைக்
கடிவாள மற்றதோர் குதிரைபோ லானான்
மோதலுக் கும்அவன் பயந்தான் – காதல்
முறிந்துவிட் டால்முடிவு யாதென 'முழி'த்தான்!

எதுசெய்வ தென்றுதெரி யாத – இளைஞன்
எதற்கும் என் அண்ணனிடம் ஏகுவேன் என்று
மதிசொல்லும் ஆனையிடம் வந்து – நொந்து
மன்றாடி னான்பிள்ளை மன்றாடி நின்றான்

ஆருமே இல்லாத நேரம் – இந்த
அண்ணனுந் தம்பியும் அவள்வீடு சென்றார்
பாரமால் யானையென அண்ணன் – தம்பி
பழுத்ததோர் வேதியக் கிழவனாய் விட்டான்!

குஞ்சரம் கண்டஞ்சி வள்ளி – குளறிக்
கூப்பாடு போட்டாள் குலைவுற்று நின்றாள்
தஞ்சமென முற்றத்தில் நின்ற – கிழத்
தாத்தாவை மெய்யுறத் தழுவியே கொண்டான்!

வள்ளிதிரு மணமென்று வான – நாடர்
வாழ்த்தினார் கந்தனும் கடைவிழிக ளாலே
வள்ளிமதி விழிகண்டு கொண்டான் – நாணி
வள்ளியும் வள்ளல்பத வனசமுட் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமனின் தலையிலே குட்டி – சேந்தன்
பிரணவத் துட்பொருள் உபதேசஞ் செய்தான்
அரனுக்கும் அதுசொல்லி ஐயன் – இந்த
அகிலமே போற்றுசிவ குருநாதன் ஆனான்!

காட்டுவழி வந்ததமிழ்ப் பாட்டி – நாவற்
கனிகள்சில தருவையோ இடையனே என்றாள்
மோட்டிடைய னாகுமிள முருகன் – நன்கு
சுட்டகனி யீந்தவள் துடுக்கொழிய வைத்தான்!

சிறுபாலன் என்றெண்ணிச் சூரன் – செருவில்
சீறியெதிர் கொண்டுகணை தூவிவரு காலை
சிவபாலன் ஞானவேல் விட்டான் – பாவம்
சேவலும் மயிலுமாய்ச் சூர்வேலை விட்டான்!

இந்தவகை தந்தைகும ரேசன் – என்றும்
எண்ணற்ற லீலைவிளை யாடல்பல செய்வான்
ஒன்றிரண் டல்லவே அம்மா – முருகன்
ஓயாத லீலைகள் ஒருகோடி அம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மனிதற் கொரு நீதி?

பெற்றமனம் ஒன்றுசொலப் பெண்ணரசி மாறுசொலக்
கற்றதெலாங் கூழாகிக் கதிகலங்குங் கணவனெனத்
தத்துவங்க ளொருதிக்கு ஆசாரம் மறுதிக்காய்
நித்தநடை போடுதலின் நிலைதடுமா றும்மனிதன்
கத்திமுனை வாழ்வதுநின் கருணைக்கோ ரிழுக்கதனால்,
பேரொளியா யுலகோம்பும் பிள்ளைமதிப் பெரியவனின்
சாரமெனப் பிரணவஞ்சொல் சண்முகவே லாயுதனே!
தேராதான் தெளிவிடும்பை தீராது தீந்தமிழ்த் தேன்
வாராது வயிறடங்கா வரதனே கேளிவைநீ.

மொட்டுகளைப் புறம்வைத்து மலர்களையோ கோத்திடுவர்
பட்டுடலிற் சூடுதற்குன் பணியாளர் பாலகனே?
பொருளியலிற் கலைத்துறையிற் புன்மொட்டாம் பதத்தினரை
அருளியலில் கொடுமனத்தா லகற்றிவைத்த லறமாமோ?

முள்ளிக்கும் முத்தியென முழங்குசைவ நெறிவாழ்வில்
உள்ளத்தொன் றுனவரைத் தள்ளிவைத்த லுயர்வாமோ?
கள்ளவிழி வள்ளியிடைக் காதல்செய்து கல்யாணங்
கொள்ளவைத்த தத்துவமுங் குறைமதியிற் குழம்புவதோ?

திருநாவுக் கரசரைப்போற் தினமுமுடற் பணிபுரியும்
அறவாள ராலயத்து ளாரா தனைகாண
உருகாத கதவுதக வற்றதெனக் கருதுவரே!
முருகாவுன் மக்களிடை முகங்கோட லழகாமோ?

எனவே,

எங்கும் நிறைந்த எழிற்பரம் பொருளுன்
பொங்கும் அழகுப் புதுமைப் பேரொளி
மங்களம் எல்லா மனிதருந் துய்க்கும்
சத்தியப் பேறு தலைப்படக், குலமுறை
வித்தையி லூறும் ஆணவ மித்தை
விலகி மனிதம் துளிர்விட, மனிதன்
உள்ளக் கதவந் திறந்து காட்டிக்
கள்ளவிழ் கடப்பந் தாரோய்! ஆங்கே
நீயிலை யென்னும் நினைவுள் ளூறுத்தி
நின்னை யிருத்தும் நன்னெறி
அன்னவர்க் குணர்த்தி ஆளுதி வேலோய்!

2



64076
41844
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலியே பயிரை மேய்ந்தால்?

கந்தா கருணைக் கனியே குகனே
எந்தா யிரவும் பகலும் உனையே
நொந்தே நுவலும் தமிழைச் செவியு
ளுகந்தா யெனநா னறியே னருளோ?

சிந்தை யெனுமோர் புதுமைப் பொருளே
நிந்தை தருதல் நிமலா அழகோ?
கந்தல் அதுவும் அழுக்கு மிருந்து
எந்தன் உயிரை யிகழல் அறமோ?

வள்ளிப் பெண்ணின் கனிவா யிதழில்
துள்ளும் அழகில் துவழும் இடையில்
கொள்ளும் நகிலில் குழையும் மொழியில்
உள்ளம் பறிபோ னதுவுன் விறலோ?

தேனை யளைந்து தினைமா வீயும்
மானை மயக்கல் அறமோ மறமோ?
வானை விளக்கும் வான்கரு ணையுட்
கோணி னொதுங்குங் கோடியு முண்டோ?

வேதப் பொருளை விளங்குன் தந்தைக்
கோதும் புலமை ஞானக் கனியை
வாதக் காலர் வழங்கும் போது
நாத மிழந்த நல்குர வென்னே?

வேலி பயிரை மேய்ச்சல் தொடங்கின்
சீலம் செத்துப் போகா தோசொல்?
நீல மயிலில் நிலவும் பவளக்
கோலக் குமரா குறையொன் றலதோ?

மூளைச் சுனைசிந் தனையற் றதனுல்
நாளும் பொழுதும் நலியும் இதயம்
வேலை விடுத்துன் ஞானந் தருவாய்
பாழும் மனமீ னுயிர்தப் பிவிடும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுத் திருமே னியைக்கண் பார்த்துத்
தொட்டுப் பதமை நுகரும் தவனம்
கட்டுக் கடங்கா துந்துங் கந்தா
சொட்டும் அழகுட் சுவைப்பா னருள்வாய்!

மேலும் கீழும் நெறிதப் புதலால்
ஞாலம் முருகா கருகும் உயிரே
நூலோர் மதிசொல் லுரைனுண் பொருளின்
வாலே தெரியும் தலைதெரி யேனே!

பாலா முருகா பழனிக் குமரா
வேலா யுதனே குகனே வரதா
பாழா யுறையும் மதியுண் மலரக்
காலா வதுவுன் கருணை யலவோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் நீ!

கண்ணின் மணியானுய் கந்தா! – என்
கருத்திற் கொளியானுய் கந்தா!
விண்ணின் பொருளானுய் கந்தா! – என்
விருப்பின் வேரானுய் கந்தா!

தீயின் பிழம்பானுய் முருகா – பிள்ளைத்
தென்றற் சுகமானுய் முருகா
நோயின் பகையானுய் முருகா – எங்கள்
நுங்கின் சுவையானுய் முருகா!

தமிழின் வடிவானுய் குமரா – இல்லை,
தங்கத் தமிழானுய் குமரா
அமிழ்தத் தணுவானுய் குமரா – அந்த
அணுவின் சுவையானுய் குமரா!

ஞானப் பழமானுய் வேலா – இந்த
ஞாலக் குருவானுய் வேலா
மோனத் துணர்வானுய் வேலா – அவ்
வுணர்வுக் குரியானுய் வேலா!

பூவின் மணமானுய் குகனே – சீறும்
புலியின் வடிவானுய் குகனே
பாவின் வடிவானுய் குகனே – அவ்
வடிவின் வேகந்தான் நீயே!

வண்ணக் கிளியானுய் வரதா – அக்
கிளியின் மழலைமொழி நீயே
வண்ணப் பயிரானுய் நீயே – அப்
பயிரின் குழுமைஉயிர் நீயே!

குழந்தைக் குறுவிழிகள் நீயே – இளம்
குயிலின் குதலைப்பண் நீயே
பழம்பாற் சுவையெல்லாம் நீயே – பாலா
பண்ணின் வளைவெல்லாம் நீயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணின் புன்னகையில் நீயே - இறுகப்
பின்னித் தவழ்கின்றாய் சேயே
பெண்ணின் விழிநளினம் நீயே - அவள்
பேசும் மொழிநெளிவும் நீயே!

புலவர் குலமெல்லாம் நீயே - அவர்
போற்றும் பொருளெல்லாம் நீயே
கயலைப் பழிவிழியாற் காதல் - கந்தா
களிக்கும் கலையுணர்வும் நீயே

மழையின் சலசலப்பு முருகா - உயர்
மலையிற் தெரிவதென உள்ளம்
இளகும் அருட்கருணை வெள்ளம் - இங்கு
என்னிற் தெரிகிறதே முருகா!

ஆற்றின் பேரோட்டம் அமலா - அருகுப்
புல்லிற் தெரிவதென உயர்ந்த
பேற்றை யளிக்குமரு ளோட்டம் - பேதை
வளைவிற் தெரிகிறதே வரதா!

தருவின் நிழலருமை முருகா - மிகத்
தகிக்கும் வெயில்தெரிதல் போல
அருமைத் திருமுருகுன் பெருமை - என்னை
எரிக்குந் துயர்த்தீயில் தெரியும்!

பிள்ளைக் கனியமுதின் கொள்ளை - யின்பம்
பித்தர் அறிவதுவோ இல்லை
அள்ளிப் பருகுனது அழகை - அன்பை
அற்றோர் அறிவதுவும் இல்லை!

குயிலின் குரலினிமை காகம் - தலையிற்
குட்டி யனுபவிக்கும் பாவம்!
மயிலிற் குலவுன்னை முருகா - முழு
மட்டி வெறுத்தல்பரி தாபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செழுங்கமலச் சிலம்பொலி!

ஒருபொழுதென் சிந்தையிலே கனலைக் கொட்டி
மறுபொழுது மங்காத நிலவை யூற்றி
ஒரு பொழுதுங் கண்ணுறங்கா வுணர்வை யூட்டி
ஓயாது நினது புகழ் பேச வைத்துக்
குறமகளின் சிறுகடைக்கண் வீச்சுக் காகக்
கோலமயில் மீதுலவி நீ யிரங்க
அறுமுகவுன் னருட்கடைக்கண் பார்வைக்காக
அனவரதம் இரங்குகின்றேன். நீயோ நானும்?

கந்தலிலே குடிசையிலே கரைகா ணாத
கண்ணீரிற் கொட்டாவிக் கெட்ட காற்றில்
நிந்தைவிதி பதம்பார்க்க நிலைகு லைந்த
நெட்டுயிர்ப்புத் தீவிடத்தில் நின்னைக் கண்டு
எந்தைகுகன் நடமாடும் ஆல யங்கள்
இடுக்கணிலே சீரழிந்த சிறுமை போக்கி
விந்தையுறக் கொடுமுடியைத் தமிழாய் வைத்து
விதியெலாம் விளக்கமுறும் அருள்வேட் கின்றேன்,

பருமரத்தைப் பற்றுபல்லி யாத லாலே
பயமில்லைக் கிலியில்லைப் பதைப்பு மில்லை
கரவினர்க ளுந்தியிருந் தெழும்பும் நச்சுக்
காற்றெனக்குத் தென்றலாய்க் கவரி வீசும்!
திருவிளக்கு மயில் சேவல் தேவ யானை
தெய்வமணங் கமழ்ஞான வேலே வள்ளி
யுறவிளங்கு வேங்கைமரம் முருகா நீயே!
யுனதடியைச் சுற்றுசிறு பல்லி யானே!

அறியாமைப் பேருறக்கம் அகற்றும் சேவல்!
அருந்துயரக் கருமேகம் மூடுங் காலை
நெறிமாறு மல்நின்று முறுவல் பூத்து
நீலமயில் ஆடென்று பாடஞ் சொல்லும்!
குறிபார்த்துப் பகைசாட வேல்! வயிற்றுக்
கொதியாற வள்ளி! தெய்வ யானை வேதக்
குருநாதா என்பாரஞ் சுமக்கும்! வேறு
குறையொன்றும் இலையுன்னைக் கூடு வேனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தியைநான் விழைகின்றே னெனவாய் கூறும்
முழுப்பொய்யென் றெனதுள்ளம் தடுத்துச் சொல்லும்
சித்தமவ்வா றுரைப்பதற்குச் சிறந்த ஏது
செம்மையுறத் தன்னைத்தா னறிந்த வாறோ?
பத்திமையிற் பாவலர்கள் பாடும் பாலா!
பாம்பறியும் பாம்பின்கால்! பாவம் சிந்தை
வித்தகத்தோ டிம்மைநலம் வேண்டும் போலும்!
வேளேயவ் வேண்டுகோள் நியாயந் தானே!

ஞானிகளைக் கேட்டதுண்டு கண்ட தில்லை
ஞானியர்தம் அடிச்சுவடும் தெரிய வில்லை
மோனநிலை எதுவென்றே புரிய வில்லை
முழுமூட மானாலும் முருகா நாயேன்
வானமெலாம் மண்ணெல்லாம் வாரிக் கொட்டும்
வனப்பெல்லாம் நீயாக வரதா இன்பத்
தேனருவி பாய்ச்சுகின்றேன் சிந்தைக் குள்ளே
செழுங்கமலச் சிலம்பொலியும் கேட்கு தையா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கங்கையிற் பாதி - கந்தனிற் பாதி !

உருகா வுளமு முருகி யிறைஞ்சுங் கதிரமலை
ஒருவா துறையும் பெருமான் முருகன் உயர்ந்தநிலை
தருவா னவனைச் சரணென் றடைவோம் தகவுறுவோம்
கருகா வினைகள் கருகும் பெருகுந் திருமிகுவோம்.

தேறல் கலந்த தினைமா தெவிட்டா வகையதர
ஊறல் கலந்தும் உவட்டா தினிக்கத் தமிழ்கலந்தும்
கூறு கலந்த குறவள்ளி கொஞ்சிக் கொடுப்பவுடல்
வீறு மிகுந்த குழகன் வினைத்தரு வீழ்த்துவனே.

குறிஞ்சிக் கிழவன் குமரன் முருகன் குகனழகன்
உறிஞ்சி வினையை யொழிக்குந் தலைவன் தமிழ்விரகன்
வெறுங்கை யடியார் விழையும் வெறுக்கை வியன்பதவி
தருங்கை யபயந் தருவன் தயங்கா தணுகுவமே.

மாணிக்க கங்கை மலரும் பதும மலரடிகண்
காணிக்க மாந்தர் கருத்தும் செயலும் கனிவுபெறின்
கூனிக் குறுவிய கிழவர் வஞ்சனைக் கேடுறுமோ
வானத் தளவன்றி மேலும் புகழ்வளம் வாய்த்திடுமே.

வீட்டுக்குள் சூரன் விளங்கும் வரைநமக் குய்விலைத்தன்
பாட்டுக்குப் போவனென் பாயேல் அடகெடு வாய்மனிதா
வாட்டத்திற் காலங் கழியற்க வாகதிர் காமத்திறை
நாட்டத்தைக் கண்டதும் சூரன் நழுவும் பழையபயம்.

தாவர மென்றுயர் தாவரம் தாழும் தலைவணங்கும்
கோபுர வாயிற் படியிற் குமரன் திரைமறைவில்
நீவரக் கண்டதும் நெஞ்சு குளிர்வன் நினைந்துதலை
வாவர மென்றடி விழுதி வள்ளல் வழங்கிடுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்க கங்கையிற் பாவங்கள் பாதி மறைந்துவிடும்
ஞானக் கொழுந்தினை யேத்தலிற் பாதி யிறந்துவிடும்
ஏனிந்த யோசனை ஏகுதி யின்னே கதிரமலை
ஆனந்த வாழ்வுக் கதுவே யொருவழி யென்நெஞ்சமே.

ஏமத்தை நல்கு மினியவ னேந்த லுறையுங்கதிர்
காமத்தை நண்ணிக் கருணைக் கடல்கந்தன் பேராயிரம்
நாமத்தைப் பாடவன் பக்கலிற் சென்று நயந்தணியும்
தாமத்தை வேண்டுயிர்த் தையல் நலிதல் நெகச்சொல்லியே.

கனவும் நினைவுங் கதிர்காம மாகக் கருத்தொடுகொள்
வனவுங் கொடுப்பன வுங்குகன் வாழ்புக ழாகநிதம்
தினவுஞ் செருக்கும் ஒழிந்து திருவுற வேலவனை
இனமும் வழுத்தா தொழிவதும் பாவம் எனப்படுமே.

ஆவி கரைத்துப் பதுமங் கழுவி யறிவுமலர்
தூவி யமுதங் கனிதமிழ்த் தீபநற் றூபமிட்டும்
பாவி யிருண்மிகு பாவ அறையிற் பதைப்புறுவேன்
சாவி நினதருட் கையி லிருப்பநான் சாவதுவோ.??

# அடியேன் ஆறு(ம்) படைவீடு!

பல்லவி

முருகா கதிரைமலை முருகா
கருகாதோ எனது வினை முருகா (முருகா)

அநுபல்லவி

பருவஉடல் வள்ளி பட்டுடலைப் புல்லிப்
பைந்தமிழைச் சொல்லும் பச்சை மயில்வேலா (முருகா)

சரணம்

பம்பரமும் ஓய்வுபெற்றுப் படுக்கும் – இந்தப்
பாவிமனம் ஓயாதே துடிக்கும்
இம்பரிலே இதுவுமொரு கோலம் – இறைவா
என்னவினை செய்தேன்முற் காலம்? (முருகா)

தன்னிறைவு என்னுயிரில் இல்லை – கன்னித்
தமிழ்தந்த பேருதவி தொல்லை?
மன்னவனின் னருளிருக்கு மெல்லை – துன்ப
மரணமெனைத் தீண்டுவதோ வல்லை! (முருகா)

ஆறுபட வீடுனக்கு முண்டு – ஐயா
ஆறுபடை வீடெனக்கு முண்டு – மணி
ஆறுதவழ் அரியகதிர் காமம் – அடியேன்
ஆறுபடை வீடாகும் அருள்வாய்! (முருகா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுகமான பொருள்

அமுதகலை சொரிநிலவு விளைமதியம் ஒன்றே
அம்புயப்பெண் கண்காட்டி யாடுசுனை ஒன்றே
புவியுடலைப் புல்லரிக்கும் மென்தென்றல் ஒன்றே
புன்செவியிற் தேனூற்றும் புகழ்வீணை ஒன்றே
தமியனுயிர்க் குயிரீயும் தமிழ்க்கவிதை ஒன்றே
தனிமையுறு பொழுதுவிரை தடவுமலர் ஒன்றே
தகுதியுறு மாறுமுக மானபொருள் கதிரைத்
தமிழ்விரக! அருளியெனை யாட்கொள்ளல் வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சன்னிதி :**

# மனித்தப் பிறவியும் வேண்டுவதே!

சன்னிதி யென்னச் சரீரஞ் சிலிர்க்கும். கசிந்துருகிச்
சன்னிதி யுன்னச் சகல துயருஞ் சரிந்துபடும்.
சன்னிதி சாரநல் லின்பம் மகிழ்ச்சி சுரந்துவரும்
சன்னிதி பாடச்சா ராதன இல்லைச் சரணடைவோம்!

கண்கண்ட தெய்வம் கலியுகக் கந்தன்! சருகடைந்து
புண்கொண்ட நெஞ்சின் புகலிடம், என்றும் புதுமைதரும்
விண்கண்ட இன்பம் விளையும் சுரங்கம், விதிகடந்து
மண்கண்ட வாழ்வு மலரும் அருட்சுனை சன்னிதியே!

முருகு! அடடா இதுவே முழுமை! அருளழகு
பெருகு மிளமை பெருந்தவம் வீரம் பெலத்தொடின்பம்
மருகு மரன்தரு மாண்பின யாவும் முருகு! அவன்
உருவு வெளிப்படும் ஓலக்க மண்டபம் சன்னிதியே!

வாவென் றழைக்க வருவான் முருகன்! வரம்நிறையத்
தாவென்று வேண்டமுன் தந்திடு வான்குகன்! தாங்கியெனைக்
காவென் றுருகக் களிப்பொடு காப்பன்! கனிந்ததமிழ்ப்
பாவொன்று கூறஎன் பக்கத் திருந்து யழகுவனே!

காவடி கொண்டு களிப்பூட்டு கண்ணப்பன் அன்னவர்கள்
காவடி வேலவ என்று கரையக் கருச்சுமையைக்
காவடிப் பங்கயம் காணி பணந்திரு வற்ற வெறுங்
காவடி யென்னையுங் கண்ணிமை போல்நிதங் காத்திடுமே!

முத்துப் பதித்த முகதலைச் சேலை முடிச்செறிந்து
தொத்திப் பிடித்துனைப் பின்புற மாயின்பந் துய்க்குமொரு
பித்துப் பிடித்தலைக் கன்னி பிணங்குஞ் சதிபுரிந்தோ
முத்தந் திருப்பி யிருப்பாள் மலைக்கன்னி சொல்முருகே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெங்காய வாசனை வேரறுக்கும் குகன் சன்னிதியில்
வெங்காய நாற்று விளைவது கண்டு விதிர்ப்படைந்து
தங்காதலன் தவ வாற்றலுக் கிதேறை கூவலென
வெங்காய முள்ளூறும் வள்ளி! இருவினை யொப்பிதுவோ?

கன்ம வியாதி கனவிலுங் காணு வகையருளித்
திண்மை யுடலுந் திருந்திய உள்ளமுந் தந்திடுவாய்!
வண்மை சிறந்து வளர்தலம் சன்னிதி வாழ்முருகே
பெண்மை சிறந்த தமிழ்ப்பே டனுதினந் துய்ப்பவனே;

இசைநூ லளபெடை போல்மன வாசை மிகலும் அருட்
பசையே யறியாப் படுமர வாழ்வு பதைக்க, முது
தசையே யடைந்து முகத்திலீ யாடா வகைபிணமாய்த்
திசையே தெரியாக் கலன்போற் திகைத்தல் திருவுளமோ?

தனித்த புகழ்வளந் தாங்குந் தவச்சுனை சன்னிதியிற்
பனித்த மனத்தொடு வாய்புதைத் தையர் பரவியுளம்
இனிக்க எடுக்குந்நீ பாரா தனையெழில் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சன்னதி என்னிதி!

எங்கெங்கு நோக்கினும் வேலே யெறிந்து வினைதுரத்தும்
தங்கப் பிழம்பு தமிழொழு கும்விழிக் காந்தவொளி
பொங்கும் அருட்பிர வாகம் பொலியும் அடியவர்சத்
சங்கம் முழங்கும் மகிமைகொள் சன்னிதி என்னிதியே.

இரவும் பகலும் மனக்கண் ணுறக்கம் இலை அதனுற்
கரவா யுறையுட் பகைஞர் கபடம் சதிகெடுத்தும்
மருவு மடியர் மனக்குகை கொள்ளும் வரைகொடுத்தும்
பெருகிக் கொளும்பே ரருட்டிரு வென்னிதி சன்னிதியே

சோற்றுச் செருக்கல வோதமிழ் மூன்றுரை செய்ததெனப்
போற்றுங் கவிதை பொருளுரை யேகுகண் சன்னிதியிற்
சோற்றுக் குவியற் சுவைபட வேசுதி கூடியமென்
காற்றுங் கவிசொலும் கந்தலுஞ் சொல்லும் கனிவெழவே.

ஊன்செத்துப் போக ஒருகாலும் வேண்டேன் உயிர்த்தெய்வமே
நான்செத்துப் போகும் நலனருள். அஃதே எனக்கமையும்
தேன்செத்த பூவெனத் தேடாக் கிடையாய்த் திரிபவனை
வான்தத்து பேரின்ப வெள்ளத் தழுத்தி வளர்த்திடுவாய்

ஆறு தலைக்குகன் அற்புத பாத பதுமமலர்
ஆறு தலைத்தரும், அன்பு மனத்தருட் டேன்பிலிற்றும்,
மாறு தலைத்தரும், மாற்றம் இனிக்கும் மயிலனடிப்
பேறு தலைப்பட லேயத் துவிதம் பிரிவிலதே!

காரோ டுகண்டன் கருநாகங் கையிற் தவழுபவன்
பேரோ டுதாங்கும் பெரும்பித்தன் என்னைக் கடைக்கணியான்
பேரோ டுவாழப் பெரிதருள் சண்முக வாழியநீ
வேரோ டிவிளா முளைப்பினும் தாய்வழி தப்புவதோ!

வள்ளி யொருபுறம் வள்ளல் மறுபுற மாகநின்று
அள்ளி யெடுத்தெனைத் தாங்கலின் ஆய்த எழுத்தெனவே
கொள்ள முடியும். நுணுகிய ஓசை குறைதலினுல்
தள்ளி விடுவர் தமிழ்ப்புல வோரிசை தந்திடுவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு சிற்றையும் ஒவ்வோர் கதை சொலும் அவ்விதமே
ஒவ்வொரு புந்தியும் ஒவ்வொரு தத்துவம் உன்னுகையில்
எவ்வா றருள்புரி வாய்? என் னிறைவ * கலியுகத்திற்
கொவ்வா இயல்புக ளீந்தனை யுன்னை நினைப்பதற்கோ?

வல்லை வெளியிலென் வாணி கொலுவிருப் பாளவனைத்
தில்லை வெளியிற் திருநடக் கூத்தன் புதல்வதினைக்
கொல்லை வெளியிற் குறமகள் கூட்டும் தமிழ்ச்சுவையால்
நல்ல வழியிற் பணிசெயக் காக்குதி நாயகனே.

தமிழின் குணமோ தனிமை யிலேபிணை நற்களவு?
களவின் மொழியோ கனியைப் பழித்த தமிழ்? பெருஞ்சூ
தளவின் நகிலில் அதரத் திதழில் குறத்தியுளம்
விளையுஞ் சுவையோ? எதுவென் றறிய விழைகுவனே!

---

* கலியுகத்திற்கு ஒவ்வும் இயல்புகள் : பொய், புரளி, கோள், குண்டணி, கூடுவீட்டுக் கூடுபாய்தல், பந்தம் பிடிப்பு ஆதியன என்ப.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோரும் இன்புற்றிருக்க....

ஞானப் பழமே முருகாஇஞ் ஞாலஞ் சுவர்க்கமுற
வானம் வறளா திருத்தல் வனத்திற் பயிர்விளத்தல்
ஊனங் கரவா முயற்சிகள் மட்டும் உதவிடுமோ?
தானம் புரிசம தர்ம நெறியர சற்றிடினே!

விடியு மளவும் விளக்கெனும் இவ்வுடல் பேணுதற்கு
முடியு மளவிற் தரமிகு நல்லூண் உடைமுயற்சி
படியும் பொழுது மனமகி ழாறுதல் பள்ளிகொண்டு
விடியும் பொழுதெழ வீடிவை வேண்டும் விரைந்தருள்
வாய்!

வறுமை பிணிதுயர் ஓர்சிலர்க் கோஇது வன்பறமோ?
பொறுமை புகட்டிப் புவிதரு செல்வம் ஒருசிலரின்
உரிமை யெனமற் றவர்கள் ஒடுங்கி அகதிகளாய்ப்
பெருமை யிழந்து பெருமூச் செறிதல் பிறங்கருளோ?

வளர்ச்சியும் வாழ்வும் இலாச்சமு தாயம் வறண்டுநிதம்
தளர்ச்சியிற் சாகுந் தருவென லாகும். அதற்குளொரு
கணக்கில நோய்நொடி துன்பங் களவு கரகரப்பு
மனக்குறை தீர்க்கு மருந்துள துன்கண் மலருதலே!

அரசிய ராடி மகிழ்வுற ஆக்கிய செய்குன்றென
அரசியற் கொள்கை சனநா யகமதன் சாரல்பணத்
தினவுற ஆடுவர் செல்வர் திருவற்ற ஏழைகளோ
தினமுயிர் வாடுவர் இதுவுன் திருவுளச் சம்மதமோ?

இந்த உலகில் இறைவா தமிழன் தனைத்தவிர
எந்த மனிதன் 'மலபரி பாகம்' புரிந்துயர்வான்?
சொந்த அரசின் சுகப்பே றிலாத சுணையிழப்பை
எந்த வகையிற் தடுத்தருள் வாய்சன் னிதியிறையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமதர்மப் பூங்கா சரிநிகர் எல்லாம் எனு முலகம்
நமதென்ற கீர்த்தி நமக்கருள், நற்குறிக் கோள்கெடுப்போர்
தமைவென்று நின்வேல் தரணியைத் தாங்கி விளங்கட்டுமே
உமைதந்த சேயுறு வேல்ஞான சக்தி எனச்சொல்வரே !

எல்லோரும் இன்புற் றிருக்கவெல் லோரும் இணங்குவதும்
எல்லோரும் இன்புற் றிருக்கவெல் லோரும் உழைப்பதுவும்
எல்லோரும் இன்புற் றெதையுஞ் சமமாய் நுகர்வதுவும்
கொள்ளாத பூமகள் தள்ளாடி நிற்றல் தலைவிதியே !

ஆத்திகம் பேணும் அபேத நெறியில் அனுதினமும்
தோத்திரம் செய்யும் எனதுளம் துன்பப் பிறப்பொழிக்கும்
சூத்திரம் ஆங்கே சுருண்டு கிடக்கு தெனப்புகலும்
ஏத்திடும் முத்தி அபேதம் எனுஞ்சைவ சித்தாந்தமே!

சைவம் சிவநெறி செவ்வேள் முதற்சொற்க ளத்தனையும்
உய்யும் நெறிசம தர்ம மெனவே யுரைத்திடலால்
வையம் புரக்கும் அமுதசஞ் சீவி யதனையின்னே
பொய்யில் புலவர் புலமைப் பொருளே கொணர்ந்தருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை என்ன செய்யும்?

*(செஞ்சுருட்டி)* *(ஆதி-திச்ரநடை)*

பல்லவி

சிந்தனை யென்ன செய்யும் – சன்னிதிக்
கந்தன்கை விரித்து விட்டால் ? (சிந்...)

அநுபல்லவி

பந்த பாசம் சொந்த மாக்கித்
தந்த பாவம் வெந்து தீர (சிந்...)

சரணம்

முத்துக் குளிப்பதுண்டு – சிந்தனை
முத்துக் குளிப்பதுண்டு – மறுகணம்
பித்தம் மிதந்துவரும் – சிந்தை
பேய்க்கோலம் கொண்டுவிடும் – கணத்துள்
பேயாட்டம் ஆட்டிவிடும் (சிந்...)

ஏடு படிப்பதுண்டு – குறள்
ஏடு படிப்பதுண்டு – இடையிற்
சூடு பிறந்துவிட்டால் – ஏடு
ஓடி மறைந்துவிடும் – பண்பு
கோடு கடந்துவிடும் (சிந்...)

ஆறு தெளிவதுண்டு – மன
ஆறு தெளிவதுண்டு – அதற்கு
ஊறு நிகழ்ந்துவிட்டால் – கல(க்)கச்
சேறு மிதந்துவரும் – ஆணவ
வீறு மிகுந்துவிடும் – ஆன்ம
அழிவிற் புகுந்துவிடும்! (சிந்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தன் காதலே காதல்!

*(பூர்வகல்யாணி)* *(ஆதி)*

பல்லவி

காதலே காதல்!
கலியுகக் கந்தன் (காத.)

அனுபல்லவி

வேதமே சொன்ன வித்தகன் கள்ளம்
விட்டால் வேகும் தீயுமென் னுள்ளம் (காத.)

சரணம்

சன்னிதிக் கந்தன் சகவாசங் கொண்டால்
என்னிதி யேநிதம் எனக்கு வாராது ?
புன்னகை சிந்தி யென்னை மயக்கித்
தன்னில் விழுத்தித் தமிழின்பந் தந்தான் (காத.)

திருமணம் என்றோ வரும்முரு காசொல் ?
தினந்தினம் எண்ணித் தினவழி கின்றேன்
ஒருமுறை யிருமுறை யல்லஇவ் வூரோ
ஒன்பதி னாயிரம் முறைவடுக் கூறும்! (காத.)

அத்துவி தம்பெற அத்தா(ன்) உன்னை
ஆவி கரைந்து அழைக்கின் றேனே
புத்தொளி வீசும் பொன்னு ளெண்ணிப்
புத்தியி லேசுகம் நித்தியங் காண்பேன்! (காத.)

வேலைத் தந்தான் வேலை தந்தான்
வேலை விட்டான் வேலை விட்டேன்
காலை மாலை சாலை சந்தி
கந்த னெண்ணம் எந்த னெண்ணம்! (காத.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடிமுறை பாடும் குமரன்!

வள்ளியொடு கூடி வாழ்சுவையை நாடி
 வளருதமிழ்க் காதற் –பெருமான் நீ
வாடுமடி யார்கள் கோடிமுறை பாடித்
 தேடியுனைக் கூடும் -பெருமான் நீ
புள்ளிமயில் மீதில் பொலியவரு போதில்
 புலவர்விளை யாடும் –பெருமான் நீ
பொன்மலையி லன்னை புதல்வனென வுன்னைச்
 சன்னிதிவைத் தேத்தும் –பெருமான் நீ
கொள்ளைபசி யாறக் குவியுமன்ன தானக்
 குன்றிலலை வேற்கைப் –பெருமான் நீ
குற்றுயிரில் வைத்துக் கொடியபிணி தீய்க்கும்
 குறையினரைக் காக்கும் –பெருமான் நீ
துள்ளிவரு வேலைத் தொட்டழகு சொட்டித்
 தோகைமயி லாடும் -பெருமான் நீ
துங்கமுற யார்க்குந் தோன்றியரு ளீயும்
 தூயசன் னிதியிற் பெருமானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர்

# வேறுமோர் போருண்டு வேலெடுப்பாய் !

பூவினுட் டாமரை பூத்திடும் விண்மீ னருந்ததிநாற்
பாவினுள் வெண்பா பரவிடும் பாமணி வாசகம்போல்
ஊரினுள் நல்லூர் ! புகழத் தலஞ்சே ருமைவயிற்றுச்
சேயினைக் கண்கொண்டு கண்டபின் மற்றினிச் சேர்வதென்னே !

சோதி விழிகளிற் சொக்கு முளம்பின் சுகமிழந்து
வேறு விழிகளிற் பாயு மெனும்பயம் வீண்பிரமை
ஆறு தவழும் சடைமுடி யண்ணல் அருந்தவத்து
ஆறு முகப்பது மத்தொளி யற்புதம் அற்புதமே !

கவிஞர் திலகம் கவிச்சக் கரவர்த்தி சின்னத்தம்பிப்
புலவர் பெருமான் பொழிந்த வரகவிப் பூம்புனலில்
விளையும் கனியே யளையுஞ் சுகமே விரைமணமே
வளையும் மனதுறு வன்னெறி வாட வரந்தருவாய் !

தேருத தாதி சிசுக்களை மாறித் தெரிவதென
வேருேர் தலையோ டெழுத விருந்த தரித்திரம்பெண்
கூருன பித்தன் மறதியி லென்தலை கொண்டது ? நீர்
ஆருன தீவிழி ஆறுதலை நாடி அன்புகுமே !

'பாவலர் பாடுஞ் சிவக்கனி யுன்னவ தாரமென
நாவலர் தோன்றி' நடைப்பிண மாகிய சைவநெறி
நாவுற வைத்துயி ரூட்டிய புண்ணிய நல்லைநகர்க்
காவல னேயுன் கடைக்கண் ணருளினிக் காப்பதுவே !

ஆரிய மன்னர் தருமந் தழைக்க அரசிருந்த
சீரிய வான்பதி நல்லூர் தவழுஞ் சிவக்கொழுந்தே !
மூரலில் முத்துக் கொழிக்கும் முதுமகள் வள்ளிமயிற்
சாயலி லுள்ளஞ் சரிந்த முருகா சரணருளாய் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரஞ் செறிந்த இதயத்து வீரம் விளைவித்துமண்
பாரஞ் சுமந்தர சாண்ட தமிழ்த்தாய் படுகிடையாய்ப்
பேரும் புகழும் இழந்த இழிநிலை பச்சைமயில்
ஊரும் முருகா வுனக்கோர் தலையிடி யாயிலையோ ?

கண்ணைப் பறிக்கும் ஃபொலிடோல் விளம்பரம் போலுதடு
பண்ணைப் பழிக்கும் மொழிக ளுதிர்ப்பினும் மானுடனின்
எண்ணத் தடிவிடச் சூர்வாழ் தலின்கும ராவுனக்கு
விண்ணைப் புரந்திடும் வேறுமோர் போருண்டு வேலெடுப்பாய் !

நல்லை மிகநல்லை நல்லை முருகா மிகவுநல்லை
தொல்லை துடைத்தருள் துன்பந் தடுத்தருள் துட்டநெஞ்சக்
கல்லைக் கனித்தருள் ஐம்புலக் காட்டை யழித்தருள் பூக்
கொல்லைக் குறத்தி குறிசொலக் கொஞ்சும் குருபரனே !

காகங்கள் குட்டவும் காகா வெனக்கரை யாதுகரு
மேகக் குயிலிசை கூகூ எனத்தமிழ் மேதிசெவிக்
கோதும் பணிபுரி சோலைத் திருவுறு நாயகனே
பாவங் களைந்துன் பதமலர் தாதமிழ் பாடுதற்கே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோற்றுப்படைக்கோராற்றுப்படை!

பல்லவி

நல்லை நாயகனே – ஏழை
தொல்லை துடைத்தருள்வாய்!

அநுபல்லவி

கொல்லைக் குறக்கொடியைக் கொஞ்சுந் தமிழ்வளர்க்கும்
நல்லூர் நயந்துறையும் நாதப் பெருவெளியின் (நல்)

சரணம்

கோபுரம் கண்டேன் கும்பிட்டு நின்றேன்
குமரனைக் கண்களிற் கண்டுகொண்டேன்
கோபுர மேலே ஏழையின் எலும்புக்
கோளத்தைக் கண்டேன் குனிந்துவிட்டேன்
குனிந்துவிட் டேன்மனங் கனிந்துவிட்டேன்
குறைதீ ரும்வழி கூறுய்குமரா! (நல்)

ஆற்றுப் படைபடித் தானந்த மானேன்
அருமைத் தமிழில் அகங்குழைந்தேன்
சோற்றுப் படையைப் பின்னுற் கண்டேன்
சுருண்டது உள்ளம் துவண்டதுவே!
சோற்றுப் படைக்கோ ராற்றுப்படைசொல்
பேற்றை யளிப்பாய் குருபரனே! (நல்)

எங்கெங்கு நோக்கினும் துன்பம் பிணியேழ்மை
என்னுற் சகிப்பதோ இயலவில்லை
தங்கச் சிலைபோல நீயிருந் தென்பயன் – முழுத்
தரித்திரம் ஆட்சி செய்யுதையா
தரித்திரம் ஆட்சி செய்யுதையா – அதிற்
சனத்திரள் வெந்து சாகுதையா! (நல்)

நம்பிக்கை யற்ற நடைப்பிணக் கூட்டமே
நான்காணும் சொந்தச் சகோதரங்கள்
வெம்பி வெதும்பி வீதியில் வீழுதல்
வேலோயுன் கண்ணிற் படவில்லையோ?
வேலோயுன் கண்ணிற் படவில்லையோ – அவர்
ஏலோல முன்செவி விழவில்லையோ? (நல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாங்கு வாழ...!

காந்த விழியெங்கே கன்னல் மொழியெங்கே
காந்தன் விரலெங்கே வேலெங்கே – சேந்தனருட்
பால்வடியும் பட்டுடலி லல்லாது மற்றையெதன்
பாலவற்றைக் காண்பாய் பகர்!

நாவலரின் நாசிவரு காற்று வளர்தமிழின்
பாவலரும் நல்லைக்கண் பைந்தமிழ்க் – காவலர்கள்
கட்டிக்காத் துள்ளங் கனிந்து வளர்தங்கக்
கட்டிக்கா ருண்ணெகிழா தார்?

பேதை மடநெஞ்சே பேரிமய வெற்பிறைவன்
பேதை மணிவயிற்றுப் பிஞ்சுடலை – நாத
மறைப்பொருளைச் சிந்தைமடுத் தாரெதையு மென்றும்
மறைப்பருள மென்பதுவோ வீண்!

சாலையெலாஞ் சோலை சலசலக்கும் நல்லையிள
வாலை மகளிர்தம் வாய்நிறையப் – பாலைப்
பழித்த தமிழ்பாடிக் காளைபதம் போற்றிப்
பழிப்பர் பழவினையன் பால்!

சூரன் பொடிபடவிண் சுண்டிவேல் விட்டபெரு
வீரன் மலர்ப்பதுமம் வீழொருநக் – கீரன்
அடிமனதி லூற்றெடுக்கு மன்புண்ட செவ்வேள்
அடிமனதில் வைத்தல் தவம்!

கண்ணீரில் நின்கால் கழுவித் தினந்தொழுது
முண்ணீர்மை மாறு விதியுன்னக் - கண்ணுளுன்
வேலைக் கருதிலனேல் வெம்மை கரைகாணு
வேலையினும் விஞ்சிவிடு மே!

நெஞ்சக் கலசம் நிறையன்புப் பாலூற்றக்
கொஞ்சிக் குடிக்கு மிளங்குமரன் – வஞ்சியான்
நல்லைநகர் வீதிதமிழ் நாதம் எழுப்புகின்றுன்
நல்லைநீ யன்னவனை நாடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னகையைப் போட்டுமென் புன்னகையைக் கொட்டுமுற்றம்
தன்னவையே யாகத் தமிழ்தழைக்கும் – நன்னெறியின்
பாடுமிகும் நல்லைப் பரம்பொருளைக் கண்டுதுன்பப்
பாடில்லை யென்றுநிதம் பாடு!

மாம்பழமும் மங்கையரும் மாறுடும், செந்தமிழ்த்
தேன்பழம் வீதியிலே சேருடும் - வான்பழுத்து
வீழுந் திருமிகுந்த நல்லையிறை வேண்டவினை
வீழும் விளங்கிடுவாய் விண்,

காதல் விளைத்துவிடும் கந்தன் கருணைநிதம்
சாதல் தடுத்துவிடும் சஞ்சலங்கள் – மோதல்
கெடுத்துவிடும் இன்பங் கொடுத்துவிடும் வானிற்
கெடுத்துவிடு முன்னை யுடன்.

மஞ்சந் தவழ்கோ புரவாயில் கைகடந்து
மஞ்சம் பவனிவரும் மங்களத்தில் – நெஞ்சம்
களிக்கும்பே ரானந்தக் காட்சிதருங் காந்தற்
களிக்குந் தமிழ்ப்பா சுரம்.

கைலாய வாகனத்திற் கந்தன் களித்துவரக்
கைலாயங் காணுதார் கண்ணிழந்தார் – புவிமீதில்
வைத்தகண் வாங்காது நோக்குந் திருவிலிக்கு
வைத்தகண் கண்ணன்று புண்.

துன்பக் கருமேகந் தோன்றி யிருள்பரப்ப
மின்புக் கதுபோலென் மெல்லுளத்தில் – அன்புக்
குருவாயே வந்துவந்து கூறு மொழிகட்
குருகாதோ யேழை யுளம்.

நல்லைக் குமராவுன் நாமம் மனத்தெழலும்
பல்லைக் கடித்துப் பொறுத்தபிணித் – தொல்லை
குறையுங் குறைந்துவிடும் குன்றுத வன்பங்
குறையு மெனக்கென் குறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றதெலாம் வெற்றுலக மாயகத்திற் கண்டுநொந்து
நற்றவத்தை நாடிவந்து நல்லையிலே – கொற்றவனுன்
காலைப் பிடித்துக்கண் ணீர்சிந்தி யுன்னருள்வாய்க்
காலிற் படிவார்மே லோர்!

முத்துக் குமார சுவாமி முகம்பார்க்கப்
பித்தந் தெளிந்துவிடும் பேய்மனமே – நித்தம்
குடைந்தாட லாமருட் பேராழி கூர்வேற்
குடைந்தோடும் தீயவினைக் கோள்!

ஐயனே நல்லூ ரழகனே ஞானவேற்
கையனே கந்தா கடப்பந்தார் – மெய்யனே
ஆறுமுக வேலோய் அடியேன் துயர்கெடுக்கு
மாறுமுகந் தாவர தா!

நூலறும் பட்ட மெனநொய்யேன் கற்பனையோ
மேலெழும் போதிலுன் மென்மையருள் - தானறலால்
பாட்டம் விழுந்தபரி தாபத் துயரைநிற்
பாட்டும் வழியருள்பா லா!

நல்லைநகர் முற்றத்து நாத்தடுமா றப்புலம்பிக்
கல்லுங் கனியக் கசிந்துதமிழ் – சொல்லவளர்
வேலா யுதன்பாதம் வேண்டின் மனிதவெது
வேலா ததுவுனக்குப் போ(ம்)

எந்தவொரு நேரமுமே மென்தொங்க லைப்பிடித்துச்
சந்திவழிச் சாவதுனக் காண்மையோ – சிந்தையே
வையத்துள் வாழ்வாங்கு வாழும் வழிகாணப்
பையவே நல்லையிறை பாடு'

ஆடு நனையுதென வோநாய் யழுமுலகைச்
சாடி நொறுக்கித் தனிவெற்றி – சூடிப்பின்
புத்தம் புதுவழியிற் பூமியுருண் டோடுதற்கு
நித்தம் அருள்தாகந் தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேறேதும் யான் வேண்டேன் !

குதிரை முகமுறு கோமகள் வாழ்வு குலேந்துவிதிச்
சதியி லுழன்று சலித்தழு நெஞ்சொடு சண்முகவுன்
பதியை யடைந்திரு பாதந் தொழுது பரவுதலும்
மதியை நிகர்முக மான புதுமை மலருகவே !

*மிருக வியல்பு தடிந்து மிளிரும் மனிதகுணப்
பெருமை யளிக்கும் பிரான்நீ யெனுமுட் பொருளுணர்ந்து
விரையு மெனேயும் விதிவிலக் கின்றிமா விட்டபுரம்
உறையும் முருகா உவந்தா ளுதியான் ஒளிபெறவே !

என்னுயிர் வாழ்நவ நீத இருட்டின பாரதியார்
பொன்னுயிர் கண்ட புலமைத் தமிழ்த்தேன் நறவருந்தித்
தன்னுயிர் ஓம்பிய மாவைக் குமரன் தமிழ்ப்பதுமம்
மன்னுயிர்க் கெல்லாம் மணமளித் தானந்த மாண்புய்க்குமே!

வெற்றிலே யென்றுதன் கைவிரித் தாலுங் கொடியவளின்
வெற்றிலே வெப்புத் தவிர்ப்பதும் வேண்டாக் குறுணிபுழுக்
கொத்தியுண் சேவற் கொடியவன் வெம்மைக் கருவறுத்து
மூத்தியை யீவதும் முன்னுறு மாவைக் கருக்குணமே !

சூளேப் புகைப்படர் வானக் கருமைச் சுழல்கண்டுசெவ்
வேளேத் தொழவரு வார்தங் குடைவிரிப் பார்கள்தென்னம்
பாளேச் சிரிப்பெழ நோக்குவர் பாவையர் வெய்யிலெனத்
தாழக் குடைவிடும் மாவைத் தலமோர் தனித்தலமே !

---

*விலங்கியல்பு அழித்த புரம்–மாவிட்டபுரம்
மனிதப்பெருமை யளித்தபுரம்–மாஇட்டபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம் விழுந்த முடிச்சுக ளெத்தனை யத்தனையும்
கள்ளம் பயின்ற விழிக்கயல் வள்ளிதன் காதலனே
மெள்ள அவிழ்த்து விடுவாய் முருகா மிளிருமன்பு
வெள்ளம் சுரந்திடும் சத்திய தேவதை வேர்விடுமே !

வெல்லென்று சொல்லியுன் வேல்தரு வாய்தமிழ் வேலவனே
கல்லென்று சிந்தையுந் தோல்வியிற் கன்றிக் கனக்கிறதே
நல்லன்பு செய்ய விலையென்று நீயுள் நசிவதிலும்
கொல்லென்று காலனை யென்மேல் விடுவாய் குருபரனே !

ஆயிர மாயிரம் ஆண்டரும் பாடுபட் டாக்கிய, வுன்
கோபுர வாசலி ஞேங்கிய மன்பதைக் கோலமின்று
தேயுது தேயுதென் றேங்குவர் தெய்வத் திருமிகுந்தார்
பேயுறை காடெனப் பூமகள் தன்னெழில் பொன்றுவதோ ?

பன்னிறப் பூங்கா எனப்புல வாழ்வு பலநிகழ்ச்சி
தன்னகம் பூத்துத் தரணிக் கழகு மணமுறத்தந்
துன்னரு ளாற்றமிழ் நாடொறு மின்பக் கனிபழுக்கு
மின்னரு ளன்றிமற் றேதும்யான் வேண்டேன் இனியவனே!

ஆறு முகப்பெரு மானே யுனதருட் கோலவெழில்
கூறு மொழியெனக் கில்லைக் குமரா குருபரனுள்
ளூறு தமிழ்த்தேன் மடுத்தபொன் வண்டென தூத்தைமனம்
நாறு மொழிமது நாடாது நானிதற் கென்செய்வனே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுட்ட பழ வேடிக்கை...

## பல்லவி

மாவைதிகழ் மாமுருகன் பெருமை – சொற்
கோவையிலே வைத்தல்மிக அருமை!

## அனுபல்லவி

பாவைவல்லி பரிமுகத்தைக் கண்டான் – வல்லி
பவளவிதழ்ச் செங்கனிவாய் கொண்டாள்! (மாவை)

## சரணம்

பொங்குமருட் புதுமைவிழி காட்டி – பொய்கைப்
போதுநிகர் பன்னிருகை நீட்டி
வெம்பிறவி ஆணவத்தை வாட்டி – என்
வெற்றிதயம் தன்னுருவை நாட்டி! (மாவை)

மாவையென எனக்கொருசொல் சொன்னான் – வள்ளியம்
மாவையது கேளென்றே விட்டேன்
மாவைநிகர் மனிதன்நீ என்றான் – அட
மாவைவந்து மாவைவிடு என்றான்! (மாவை)

ஆறுமுகம் காட்டென்று கேட்டேன் – நீ
ஆறுமுகம் இதுவொன்றே யென்றான்
ஆறுதலை யன்பளிப்பாய் என்றேன் – அவன்
ஆறுதலை அம்மாவைக்கே ளென்றான்! (மாவை)

சுட்டபழ வேடிக்கை செய்வான் – மறைச்
சூக்குமத்தி னுட்பொருளாய் நிற்பான் – 'மீனை'க்
கெட்டபய லுன்னோடே யெனக்கு - பெரும்
கேண்மையென்ன கந்தாவென்று கேட்டேன்! (மாவை)

---

மாவை:
*(1) (தினை) மாவை வை*
*(2) (வள்ளி)யம்மாவை*

ஆறுதலை அம்மாவை
*(1) எனக்கு ஆறுதலைகள்*
*அம்மாவின் வயிற்றி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) மிருகத்தை
(4) மாவிட்டபுரம்
(5) விலங்கியல்பை

**ஆறுமுகம்**

(1) முகங்கள் ஆறு
(2) (உனக்கு) ஆறுதல்தருகின்ற முகம்

**ஆறுதலையன்பளிப்பாய்:**

(1) எனக்கு ஆறுதலைகளை (பேராற்றலை) அன்பளிப்புச் செய்
(2) ஆறுதலைத் தா!

லானது, எனவே அம் மாவைக்கேள்

(2) ஆறுதலை (அமைதியை) அன்னையே தருபவள் எனவே அன்னையிடம் கேள்
(3) ஆறு (கங்கை) பாயுந் தலையையுடைய அம்மாவைக்கேள், (சிவன்சடையில் கங்கையெனின் அது உமைசடைக்கும் பொருந்து மென்க)
(4) உன் அம்மாவைப் போய்க்கேள்
(5) ஆறுதலை (அமைதி) மாவைக்கு வந்துஅடைந்து கொள்

**மிளைக்கெட்ட பயல்**

(1) வீணன்
(2) வினையற்றவன்-நிமலன்

**கேண்மையென்ன கந்தா**

(1) உன்னுடன் என்ன நட்பு கந்தனே!
(2) கேண்மையை என் அகத்திற்குத் தா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தவனம் :

# யாரோ சிரிக்கார்?

கந்த வனமெங்கள் சொந்த வளமெனக் கைகுவித்துச்
சிந்தை யழிந்து செழுங்கம லப்பதம் சென்னிவைத்து
முந்தை வினைப்பழு வீழ்த்தும் அடியார் முழுமைகண்டு
எந்தை முருகன் எளியவ னுயங்குத் தோன்றுவனே!

ஓட மலையும் பரவைக் கடலலை யோடிவந்து
கூடங் கழுவிக் குமரனை யாங்கே குடியிருத்தி
நாடும் பலபே றனைத்தும் அவன்நல்க நக்குநின்று
பாடுங் கவிதையிற் பாவலர் கற்பனை பட்டிடுமே!

ஆறு முகனை யறியாது 'போலி' யெனவறைவோர்
தேறும் அருட்டிறன் லக்கணந் தேறுர். திருப்புகழைக்
கூறும் அடியரைக் கூடி மருவிக் குளிர்வித்தலால்
ஆறு முகவன் அறுமுக னுகி மருஉவுறுமே!

பானிலா முற்றம் பரதவப் பெண்கள் பலர்குழுமி
வேனிலா னந்த நறவம் மயக்க விடுகதைகள்
தேனிலா தோய்த்துத் தருவரென் றெண்ணுந் திறன்புகல
வேனிலா வூற்றும் விரகன் விடையினை விள்ளுவனே!

வள்ளத்து முத்துக் குவியலைக் கொட்டி வளர்நகையில்
கள்ளக் கருவிழிக் கோணத்தில் ஆடவர் உள்ளத்தினைக்
கொள்ளை யடித்துளக் கூட்டி லடைத்திடும் கோதையர்கள்
அள்ளிப் பருகும் அழகனைக் காணுதல் ஆனந்தமே!

வாடிய பூக்களும் வானத்திற் பட்டங்க ளாடவிட்டுத்
தாடி வழித்தங்கள் மோகலைப் புன்னகை தாவிவர
வேடிக்கை காட்டி விளையாடு திக்கம் விரும்பியொரு
சோடி மகளிர் சுகந்துய்ப் பவனே சுகமருள்வாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசை கொண்ட குமரா வுனக்கொரு பெண்ணைத்தந்து
நீரோசை பார்க்க விழைந்த குறவர் நிலைநினைந்து
யாரோ சிரிக்கார் ? அழகிய வள்ளி யிரங்கிடவோ
நீரோசை நெய்தலை வேண்டினை யென்ன நியாயமையா !

வன்னி நிழலில் வளர்பிர காசம் வறுமைகெடுத்
தென்னை வளர்க்கும் எளிமை கவியி லிழைவிடுமே.
தென்னை மரத்தி லிளநீர் தளம்பத் தெருவளக்குஞ்
சின்ன மனித ருளங்கலங்குந் திக்கச் சிவக்களியே !

முத்தார மென்ற மொழிக்கஞ்சிப் போலும் முழுமுதலுன்
சித்தான ஞான ஒருசக்தி தன்னைச் செழுமையுறு
வித்தார மானகை வேலாக மாற்றினை ! விந்தையருட்
கொத்தான வுன்னைக் குழந்தை யெனலோர் குறைமதியே !

பாணிப் பனுட்டுத் தருவாள், பதநீர் பனங்கட்டியும்
பேணித் தருவாள் எனதுள மேதிக்கப் பேரிளம்பெண்
நாணித் தயங்கலை நற்றுய் எனக்கசிந் தூறுமன்புப்
பாணி மிசைந்தபின் கந்த வனப்புகழ் பாடுதியே !

பொலிகண்டி மேவிய பொன்மயிற் காந்தனைப் போற்றுகலூழ்
பலிகொண்ட வாழ்வு பகலவற் கண்ட பனியாயிடும் !
வலிவுண்டு ! நல்ல வனப்புண்டு ! வேலின் வலிமையுண்டு!
கலியுண்ட சிந்தை கழரும் ; இருதங் இளைத்திடுமே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐவர் பழிதீர ....

(மோகனம்) ஆதி (கண்டநடை)

பல்லவி

வனவாசங் கிடையாதோ – ஐயேகந்த
வனவாசங் கிடையாதோ

அநுபல்லவி

வினைமாயை வேர்சாய மலவாச னைத்துயரம்
விடயோக நெறிதேற வீடென்னும் கரையேற! (வன)

சரணம்

எடுத்துக்கை நீட்டிக்குற் றேவல் புரிந்து
அடுத்துக் கெடுத்தென்றும் ஆர்ப்பாட்டம் பண்ணிப்
படுக்கும்பாய் தலையணை பழிபாவ மாகக்
கொடுத்தமா பாதகர் ஐவர்பழி தீர! (வன)

அவிவேக பூரணக் குருவுடன் சீடராய்
அகமுமைம் பொறிகளும் அவமானந் தந்த
பழிபோகப் புதுமைப் பவமேற ஆன்மா
பரிபூர ஞானந்த பதமுத்தி காண! (வன)

''நூற்றெருவ'' ரென்றஒரு நோக்கினும் வையர
நொய்யவிதிக் கோணல்மன அந்தகனை நீங்கிக்
கூற்றுவனை வென்றென்றும் ஆனந்த வெள்ளம்
குறையாத இறைமாட்சி பெறுவதற் – காக! (வன)

---

''நூற்றெருவர்'' – ஆர்த்தசபை நூற்றெருவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்கரைத் தாழங்கனி?

தான்தோன்றி, யாயினுந் தாழன்ப ருள்ளந் தளைப்படுவான்
வான்தோன்று, வண்மை யெனவருள் மாரி பொழிபவன்நீர்க்
கான்தோன்றி நாணுங் கரவள்ளி காதல் மதுமடுப்பான்
ஏன்தோன்றி, யென்முன் னினிதருள் ஈயத் தயங்குகின்றான்?

குன்மந் துரத்து குமரி பிராமணக் கோதைதுயர்க்
கன்மந் தொலைத்த கடவுள் புதுக்கதிர் காமனென்பர்
நன்மந் திரந்தமிழ் பாடிப்பன் ஞளும் மயக்குமென்முன்
கன்மந் தொலைக்கக் கடைக்கணி யானென்ன காரணமோ?

அட்டாவ தானி கதிரவேற் பிள்ளை யரும்புலமை
பட்டான செந்தமிழ்ப் பாவகை யூறு பதன்மிகுந்த
மட்டாரு மாநகர் மக்கள் சுவைக்கும் புலோலியிற்தெ
விட்டாத நல்லமிழ் தாகிய நாயகன் நீயலவோ.

நற்றமிழ் லக்கண நாயகன் நன்னூ லுரைவிளக்கம்
முற்றுறத் தந்த முழுமதி யாளன் நவமணியின்
பெற்றிமை காட்டுநின் பேரன் கடைந்த தமிழமுத
நற்றிற முண்டபின் னேவுனை நாவலர் நாம்பனென்றார்

தேனைப் பிழிந்த தமிழைப் பிழிந்து திருவளரும்
ஞானச் சரக்கு நயந்தளித் தான்பெரு நாவலன்மேல்
வானச் சுடர்த்தமிழ்க் கந்த முருகேசன் வாழ்புலோலி
ஞானக் கொழுந்தே முருகா எனக்குத் தமிழ்தருவாய்.

பச்சை யிளமயில் பச்சைப் பசுந்தமிழ் பச்சைவைவேல்
பச்சை மலைக்குறப் பைங்கொடி வள்ளி யெனப்பச்சையி
லிச்சை யுனக்கேன் பதில்சொல் குமரா எதுவுமொரு
பச்சை யிலேன்நினைப் பாடுமோ ரேதுவும் பச்சையன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்கரைத் தாழங் கனியென நற்றமிழ் கற்றவர்கை
விடப்படல் சற்றும் அழகல வேமுரு காபசியிற்
குடர்ப்படு வேதனை யாலவர் குற்றுயி ராய்த்தெருவில்
நடைப்பிணை மாகிய பாவமெய்ஞ் ஞான்று நலிவதுவோ?

புல்லுங் கவிசொல் புலோலிப் புதுக்கதிர் காமனுனை
அல்லும் பகலும் அருச்சித் தபோதும் அணுகுதுயர்
சொல்லுந் தரமன் றெனிலைய நின்னை நினைக்கிலனேல்
மெல்லுந் தரமோ வினையெனை மூடி விழுங்கிடுமே.

மதிலைக் கடந்து பதுமம் மலரும் புலோலிப்பதிக்
குதலை மொழிக்குற வள்ளி புணரக் குளுமையுற்று
மதலை மொழிந்து மணிக்கடை வாயி லருணீர்பெரு
குதலை விழிமடுப் பார்பெரும் புண்ணியங் கூடினரே.

தையலர் மேலேறி தாவணித் தொங்கல் வளமைகண்டு
பொய்யிடை வள்ளியின் தாய்மனை யிந்தப் புலோலியெனும்
நொய்யுரை கோண மருதம் நுடங்கு மணிநகரின்
கையிலை வேல்பொலி கந்தன் துணைப்பதம் மெய்த்துணையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கொளித் தீபம்!

நித்தியம் நன்னெறிப் பத்தியங் காப்பேன். அருண் மருந்தைப்
பத்தியிற் பாடிய பாஅனு மானமுஞ் சேர்த்துண்ணுவேன்
சத்தியம் ஐயுறல் சாவற நீயருள். சித்தாண்டியிற்
சித்திர வேலவுன் செந்தா மரைப்பதம் செந்தமிழே!

மந்திகள் பாயும் மதுமலர்ப் பூங்கா மருதமெங்கும்
சிந்துகள் பாடியுஞ் சித்துக ளாற்றியுஞ் சேட்டைவிட்டு
வந்தது யாரறி வார் எம் உயிர்க்குயி ராகிவளர்
செந்தமிழ்க் கந்தனுக் கன்றி யிவைசெயல் செவ்விதுவோ?

மருதப் பகுதி 'மறு' என் பதாயின் மருவினரைத்
தருதும் விருந்து வருக எனத்தயிர் மோருடன்நல்
அமிழ்த அடிசில் அகங்குழைந் தீவதும் சித்தாண்டியிற்
பெருகும் ஒளியே நினதருட் சித்தெனப் பேசுவரோ?

வினையி லெதிர்மறைச் சொல்லை வினையென் றழைப்பதுபோல்
மனித வுணர்வற் றவனை மனித னெனப்படுதல்
இனியுஞ் சகிக்க இயலா தெழில்திகழ் சித்தாண்டியிற்
கனியுங் குகனே கடைக்கண் ணருளாய் கதிபெறட்டும்!

சிந்திப்ப தின்மையின் தேவே யெனக்கொரு சிந்தையில்லை;
மந்தம் தலைவிதி யாகலின் மற்றுமோர் புந்தியில்லை
மந்தி வளர்கொம்பு தாவலின் ஐய மனமுற்றேன்
எந்தா யெதற்கு மிதஞ்செய்த லில்லேன் இதயமற்றேன்;

இருநா வெனக்கில்லை யாக இறைவா அகமுமற்றேன்
முருகா இதுவென் னிலையா யினும்பெரு மின்பதுன்பம்
பெருகா வருதலின் உள்ளம் எனக்குண்டு போலும்! அது
துலைநா வெனவே தொழிற்படு மாறருள் தூயவனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்துகள் செய்வதில் வித்தக ! பிள்ளைச் சிறுமதியைப்
பொத்தி மறைத்து முலாம்பூச வேண்டேன் பொலிவுமிகும்
பத்தரை மாற்றுறு பொன்னுய் வடித்துப் புலமைவெறி
நித்தமுங் கொண்டிடுஞ் சித்தருள் சித்திர நின்மலனே !

திருவாய் மலர்ந்து மொழிவன திக்கற்ற என்னுயிர்க்கோ
எருவாய் எழில் தரும் இன்பம் விளைத்திடுந் தெய்வமணம்
கருவாய் எனது கவியில் மணக்கும் கருவிழிமுன்
வருவாய் இனியும் வருத்தேல் விழிசெய் பழியெதுவோ ?

சித்திர வேலசித் தாண்டியிற் செல்வ செழுந்தமிழின்
பத்திர சக்கவிப் பாலவே லாயுத என்மனமுன்
முத்திரை வைத்துநின் சொத்தெனக் கொள்பன் விருதிங்களிற்
சித்திரை போலெனைச் சீருற வைத்திடு சேயவனே !

கிழக்கொளித் திபம் மனச்சுடர் காலக் கிளர்வடைந்து
விளக்கொளி பெற்றேன் விளங்கா தனவென் னுளத்தினுக்கு
மலர்ச்சுனை பாடு(ம்)மீன் இன்னிசை யூறி மனங்குளிர்ந்து
தனக்கிணை யற்றுன் தமிழ்ப்பத நீழல் தருமி ்பமே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரவைத் தாழங்குழி முருகையன்:

# பாவாடையாட்சி?

பாழும் பிறப்பிருட் பட்டுழல் பாவி பதைபதைத்து
தாழங் குழியிற் றலைவா! சரணெனக் கையெடுப்ப
வாழுந் திருவினை வாரி வழங்கியிவ் வையகத்தில்
நாளும் சிறக்குந் நலந்தரு நாதனை நாடுவமே!

தாழங் குழிக்குகன் கைவிட மாட்டா னெனத்தருக்கி
வாழுங் கரவை வளர்சிவக் கன்று வயலருகும்
நாளம் படாவொரு பச்சிலை நேருந் துரவருகும்
நாளும் பொழுதும் விளையாடி நிற்கும் நயமுறவே

கோவைப் புகழ்பெறு வேலன் குளிர்ந்த இதயத்திலே
பாவைக் கொழிக்கும் பசுந்தமிழ்க் கந்தம் படிந்ததனுல்
ஆவைப் புரக்கும் அருமந்த நோக்கி லமைத்தமடம்
சேவிக்க வைத்துனைச் செய்த பெருநன்றி பாடுவமே!

மடத்துக் குமரனுங் காணுவ ஞேவென் னுளத்துக்கர
வடத்தை? யடடா அதுவொரு மோடி தனிவடிப்பு
இடத்தைக் கொடுப்பின் மடத்தைப் பிடித்திடு வானிவனென்
றடுத்துக் கலங்கேல் அடியனுன் காதல் அணுவல்லவோ?

பூவாடை வீசு மடத்துப் பிரானே குறப்பொடிச்சி
பாவாடை யாட்சி படைத்தவ ளோசொல்? லுனதுதந்தை
மேலாடை யின்றியே சோனப்பு வெட்டையி லாட்டங்கொளக்
காலாட நிற்பனுன் னண்ணன் கணபதி வெல்லனிலே!

வாழ்க்கைப் பெருந்தே ரிழுப்பதற் காய வடக்கயிறு
பார்க்கப் புகின்நின் னருளன்றி மற்றிலை பைந்தமிழ்த்தேன்
நேர்த்தி மிகநேர்த்தி யென்றுண் நிமலா நினையுமகம்
வேர்க்கத் தொடங்கியே விட்டது, நாறமுன் வேல்தருவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடையாத மத்தென மூளை முழுவதும் பூஞ்சணமே
படையாய்ப் பிடித்துப் பயனற்ற தன்மை பகருகுது
விடையாய்த் தருமங் கொளுஞ்சிவக் கன்றே விரைந்திதனைத்
துடையாய் உணர்வைக் கடைந்தருள் வெண்ணையைத்
தோற்றுவிப்பேன்

அடிக்கோர் குடில ரடுத்தடுத் தென்பணிக் கூறுதந்தும்
முடிப்பேன் தமிழ்ப்பணி நின்னரு ளாலென் முருகையனே
பிடிப்பேன் நினைச்சிக் கெனவெப் பொழுதும் பெரும்புலவா!
எடுப்பாய் மயிலிவர் தோற்றம் எனக்கினி யெய்திடுமே !

உப்பறி யாதளப் பண்டமுங் குப்பை யிலேயெனுஞ்சொல்
தப்பென யாரோ நவிலுவர் தாழங் குழித்தலைவா!
எப்படி யாயினும் நின்னரு ளுப்பிலை யென்செயல்கள்
சப்பெனக் கண்டிடும் குப்பை யுருதொளி சாரவையே!

கட்டையிற் கட்டிய மந்தை கயிற்றுடன் பொட்டுக்குளால்
வெட்டையில் வந்துயர் முட்டியில் நின்றநெற் போரிடைவாய்
தொட்டதும் ஆங்குள பட்சிக் குழாமெழுந் தோலமிடும்
பட்டிமை கண்படு தாழங் குழியிறை பாடுவமே

பஞ்சப் பொறியியல் பாடுறச் சேந்தனைப் பாடுவமே !
நெஞ்சத் தடத்தில் நிலைத்தருட் பாங்குற ஆடுவனே!
கொஞ்சுங் குழந்தைக் குமரன் திருவருள் கூடுவமே-
மிஞ்சுங் கவலை மெலிவுற வேல்கொடு சாடுவனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குதித்துப் பாய்ந்த திருவடி !

முருகா முருகா முருகாவோ
முந்தை வினைகள் கருகாவோ ?
பருகா தோவுன் பாலவடியும்
பனித்த அழகைப் பாவிமனம் ?
உருகா தோவுன் கருணைநினைந்(து)
உள்ளக் கருங்கல் மெழுகெனவே ?
தெரியா தோவென் குறைப்பாடு
தெய்வச் சுடரே திருவளிப்பாய்.

வள்ளி தடவிக் கனித்தமுகம்
வையம் அனைத்தும் வாழ்த்துமுகம்
தெள்ளிப் புடைத்த தீந்தமிழால்
தினவு படைத்த தெய்வமும்
அள்ளிப் பிசைந்த தினைமாதந்(து)
அடியார் கூட்டம் ஆறுமுகம்
எள்ளி என்னைப் புறக்கணித்தல்
ஏதுக் கென்று தெரியேனே,

பகலின் வைத்த பெருந்தீபம்
பலர்க்கும் தெரியா தென்றாலும்
இகலில் உள்ளம் படைத்தவர்க்கும்
ஏனோ கண்ணிற் படவில்லை ?
அழகின் சிரிப்பை உனக்களித்து
அதனால் உள்ளச் சோர்வகற்றும்
பழகும் தமிழின் பாவைக்கும்
பாவம் என்ற பரிவிலையோ ?

மேலே மேலே போகின்றான்
மேதை யில்லாச் சிறுமனிதன்
போதை பிடிக்கும் புகழுக்காய்ப்
பொட்டுப் பிய்த்து நுழைகின்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ சின்ன இரகசியம்
எவர்க்கும் எட்டாப் பரகசியம்
போதே அலரும் புன்னகையாய்
பொதிந்து கிடக்கோ புலவோனே.

காதற் பாடம் வள்ளிக்குக்
கனக்கச் சொல்லிக் கனிவித்த
வேதப் பொருளே உன்னைப்போல்
விண்ணுக் கடங்காப் பெருவித்தை
நாதம் செவியில் மடுக்கேனே
நானோ பாவி மயில்முருகே
சீதம் படரும் சிவந்தவிழிச்
செல்வக் கருணை எனக்கிலையோ ?

பக்கக் கிட்டி பிடிப்பதற்குப்
பலரும் உண்டு பகலிரவாய்த்
துப்பல் துடைக்கத் துரைமாரும்
தொகையாய் உண்டு ஆனாலும்
எக்கச் சக்கம் எனக்கேனோ
எந்தாய் நினது அருளிலையோ ?
திக்கும் புகழும் என்வேஷம்
தெய்வச் சாயல் அற்றதுவோ.

ஆட்டங் கண்ட சொற்களிலே
அற்பக் கவிதை நான்பாடிப்
போட்டுப் பிடிக்க லாமென்றால்
புலமைக் குறைவு தடுத்துவிடும்
பாட்டம் பொழியும் பெருமழைநீர்
பருகும் திருவோ எனக்கில்லை
மோட்டுத் தனமாய் வாழ்வதற்கோ
மூளை கணக்கு முருகோனே.

சூலம் பிடித்த உன்னப்பா
சொல்லித் தந்த அறிவெல்லாம்
ஏலம் போட்டு விட்டாயோ
எந்தாய் ஏனோ இரங்காயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலக் குறத்தி கொடியிடைக்குக்
குதித்துப் பாய்ந்த திருவடிதான்
சாலப் பஞ்சிப் படுகிறதோ
சாவைத் தடுப்பாய் சண்முகனே.

தாழங் குளிக்குத் தலைவனெனத்
தக்கோர் போற்றும் உத்தமனே
வாழப் பிறந்த மனிதரெலாம்
வறிதே கண்ணீர் சிந்திநிதம்
ஊளை போடும் பரிதாபம்
உந்தன் செவியில் ஏறுதோ ?
காளைக் கடவுள் நீயலவோ
கந்தா என்னைக் காப்பாயே.

பாட்டுப் பாடும் பைந்தமிழில்
பசுமை சிறிதும் இலையென்று
காட்டி நகைக்க வைத்த அருள்
கந்தா நினக்கு ஏற்றதுவோ ?
தோட்டப் பயிர்போல் எனைவளர்த்துத்
துன்பஞ் செய்ய வைக்காது
நாட்டந் திறந்து பாரையா
நாடும் அடியார் முருகையா !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசம் நாசம் செய்யாதே!

நீலப் பட்டுச் சேலைக்குள்
நெஞ்சை நிமிர்த்துங் கடற்கன்னி
காலை மாலை தவறாது
காதற் கீதங் காற்றில்விடுத்(து)
ஓலம் போடும் மயிலிட்டி
உவக்கும் முருகன் கருணைமலர்க்
காலைப் பிடிக்கும் அடியவர்க்குக்
காசம் நாசம் செய்யாதே!

வள்ளிப் பெண்ணின் மையலிலே
வளருந் தமிழ்க்கு மணமூட்டிக்
கொள்ளைக் கவிதைத் தேனுண்டு
கொழுக்கும் காளைக் குமரனெழில்
அள்ளிப் பருகி அநவரதம்
அழகுத் தமிழில் மலர்கவிதைக்
கள்ளும் பருகும் அடியவர்க்குக்
காசம் நாசம் செய்யாதே!

அன்பைத் தமது வடிவாக்கி
அறிவை வாழ்வின் பணியாக்கித்
துன்பச் சுமையை இறக்கிநிதம்
தொண்டு புரியும் 'டாக்டர்'களின்
அன்புக் கரத்தில் விளையாடும்
அகத்து வியாதி இழையோடும்
கன்மச் சென்மம் உனைவேண்டின்
காசம் நாசம் செய்யாதே!

மருத்து(வ) மனையிற் பட்சிகளின்
மலர்புன் னகைத்தங் கச்சிகளின்
குருத்து விரல்கள் ஊசியொடு
குத்த வரும்போ தெம்முன்னே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்து அபயந் தருவாயே
செவ்வே லேந்தி வருவாயே
கருத்து நீயாய் இருப்பவர்க்குக்
காசம் நாசம் செய்யாதே!

ஆழிப் பெண்ணோ நீலமயில்?
அந்த அழகின் மேலசையும்
காலைச் சுடரோ நீமுருகா?
கண்ணுள் நிறைந்த இளமுருகா!
மேலைத் தவத்து மிடுக்கோடு
மெல்ல அகவும் மயிலிவரும்
காலை வாரி யுண்பவர்க்குக்
காசம் நாசம் செய்யாதே!

அடியற் றமரம் போலாகி
அல்லும் பகலும் படுக்கையிலே
கொடியில் துவளுங் கோதையரும்
குமட்டிக் கொட்டும் ஆடவரும்
விடிய விடியத் தம்மிதய
வீணை நரம்பில் உணைமீட்டிக்
கடிவர் துயரை அன்னவர்க்குக்
காசம் நாசம் செய்யாதே!

அழகை வளைத்துத் தன்மடியில்
அள்ளிக் கட்டி வைத்திருந்து
குழையுங் காச நோயினர்க்குக்
கொட்டிக் கொடுக்கும் மயிலிட்டி
வளையும் நீலக் கடலலைகள்
வாழ்த்தும் வள்ளி மணவாளா!
களையைப் பிடுங்க நீயிருப்பின்
காசம் நாசம் செய்யாதே!

அலரிப் பூக்கள் ஆங்காங்கே
அறையைப் பார்த்துக் கண்சிமிட்ட
மருளுங் காச நோயாளர்
மனதைக் கடித்துக் கண்ணுறங்கிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலருங் காலைப் பொழுதில்லை
பொழியும் அழகிற் பழவினைகள்
கழியும் நினது அடியவரைக்
காசம் நாசம் செய்யாதே!

வீட்டை நினைந்து இரவுபகல்
விதியை நெருடி மயிலிட்டி
வாட்டிற் புரளும் வகையற்றார்
வாடா வண்ணம் நகையுற்றுக்
கோட்டுப் பூப்போ லசைந்தாடும்
குகனே முருகா குமராவோ
காட்டுள் ளருளென் றழுவார்க்குக்
காசம் நாசம் செய்யாதே!

சொந்தப் புகழைச் சந்தியிலே
சொல்லித் திரியும் எழுத்தாளன்
அந்தக் கரணம் பழுதென்று
அலறி சிரிக்கும் மயிலிட்டி
விந்தைக் கடலின் கரையோரம்
விலாப்பு டைக்கக் காற்றுண்ணும்
கந்தக் கடவு ளடியவர்க்குக்
காசம் நாசம் செய்யாதே!

காய்ந்த சருகும் இளம்பிஞ்சும்
கண்ணீர்ப் பெருக்கிற் கால்கழுவிச்
சாய்ந்த வாழ்வை நிமிர்த்துதற்குச்
சாயங் காலம் நின்முற்றம்
பாய்ந்து வந்து பாட்டிசைத்துப்
பரவிப் போற்றும் சூரனுயிர்
காய்ந்த குகநின் னடியவர்க்குக்
காசம் நாசம் செய்யாதே!

முந்தை வினைக்கறை யானரித்த
முள்ளுக் கந்த லுடன்வந்து
சிந்தை கவருட லோடுமனை
செல்லச் செய்யும் ரசவாதம்
எந்தை குமரன் அருளெனவே
ஏத்துந் தமிழ்நா டன்கவிதைக்
கந்தம் படியும் மானுடனைக்
காசம் நாசம் செய்யாதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரமே தருக! வருகவே!

காதற் கடவுள் கந்தனெனக்
கவிதை கனியுஞ் செந்தமிழின்
நாதப் பொருளே! தமிழ்ச்சங்கம்
நாட்டித் தமிழா ராய்ந்துசுவைப்
போதஞ் சிறந்த புலவோனே
புத்தி தெளியும் புண்ணியநீர்
வேதப் பொய்கை விளையாடும்
வேலோய் வருக வருகவே!

பேரா யிரத்தாற் பித்துமனம்
பேசிப் பேசி யமிழ்தூறச்
சோரா தொழுகும் பேரழகிற்
சொக்கிச் சொக்கிச் சொர்க்கமுறும்
பேரா தனைப்பல் கலைக்கழகம்
பேணும் கோயில் எழுந்தருளி
ஆரா தனைக்காட் பட்டவனே
அருளே தருக தருகவே!

சங்க நிதியை வேண்டாத
சகல துறைக்குங் கலைநிதிகள்
இங்குப் பலருள ராதலினுல்
இனியோய் வனத்து ஒளவைபுகழ்
மங்கச் செய்த வாலாட்டம்
மடிந்து விடுந்தா னென்றாலும்
தங்கக் கொழுந்தே வேலாடும்
தமிழன் தவமே வருகவே!

பாரந் தாங்க மாட்டாத
பல்வே றுவகைப் பூங்கொடிகள்
தாரம் போன்ற உரிமையுடன்
தருக்கள் தோறும் வேங்கையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரும் வள்ளிக் கொடியென்னச்
சார்ந்து படர்ந்து குலுங்கிமகிழ்
சாரம் மிகுபே ராதனையிற்
சாவா முதலே வருகவே !

கவிதை போலக் கரைபுரளும்
களங்கம் மருவா மாவலிப்பெண்
அமுத நீரை யள்ளியிறைத்
தடிகள் கழுவி அஞ்சலிக்கும் !
குமுத விழியிற் கோதையர்கள்
கோலஞ் செய்து நெஞ்சுவப்பர் !
விதியை வெல்லும் விறலினேர்
வீதி வலங்கொண் டேத்துவரே !

முருகன் வருகை கலைக்கழக
மூளைக் குயர்ந்த தனிப்பெருமை !
கருகும் அருகும் தமிழென்று
கவலைப் படுவா ரினியில்லை.
பெருகுங் கங்கைக் கரைமாதர்
பேணிப் போற்றி இதயமலர்
செருகுந் தெய்வ நறுமலர்நீ
செந்திற் சேயே வருகவே !

கன்னிக் குறத்தி காதற்பெண்
கசியும் நசியும் கலையழகு
எண்ணக் குவிய லத்தனையும்
இழையோ டிவரும் பேரிளமை
கண்ணைத் தோண்டி எடுத்தாலும்
கலங்கா வீரம் நீயென்றே
பண்ணிற் புரளும் பாவலர்கள்
பாடும் முருகே வருகவே !

செங்கதி ருச்சி விளையாடும்
சேல்விழி மந்தி கழையோடும்
இங்கித கோகுல மிசைபாடும்
இதமுறு மாமயில் நடையோடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கிய மாவலி புகழ்தேடும்
புத்தியி லிளைஞர் மனங்கூடும்
இங்கிது பேரா தனையாயின்
இளமுரு கேநின் னிடமன்றோ !

மிளகைக் கறித்த இளமந்தி
மேதிப் பாலைக் குடித்துறைப்புக்
கழுவித் துள்ளும் மலைநாடு
கந்தா வுனக்குப் புதிதன்றே
பழகப் பழக இனித்துவரும்
பச்சைத் தமிழி லுளம்மூழ்கி
அளவைத் திமிறி அன்புவளர்
அடியா ருனக்கு மடியாரே !

அமிழ்தைக் கொண்டு மிகமுந்தி
அவனிக் கிறங்கும் மாவலிபோல்
தமிழைக் கொண்டு யார்முந்தித்
தரணிக் களிப்ப மெனத்தவிக்கும்
நலமிக் குடைய மாணவர்கள்
நாளும் பொழுதும் நயந்துருக
வலமிக் குடைய வடிவேலோய்
வரமே தருக வருகவே !

அருவி கொஞ்சும் மணிமலைகள்
அவைகள் கொஞ்சும் விண்சுடர்கள் !
அரிய கொடிக ளெல்லாமே
ஆடிக் கொஞ்சும் அருமரங்கள்
பெரிய இடத்துக் குறமங்கை
பேத மின்றி யுனைக் கொஞ்சும்
தருமக் கடலே முருகேநீ
தமிழைக் கொஞ்சி யருளுகவே !

64076
4139M



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தக் களிப்பு

*[அம்பலத்தரசே அருமருந்தே...]*

அறுமுகத் தேவே யிளமுருகே!
அற்புத ஞானக் கனியமுதே!
குருபர னேயருள் மேலவனே!
குன்றுதோ றுளடிம் பாலகனே
தமிழ்தரு ஞான வேலவனே!
தமிழ்க்குயி ராகிய காவலனே!
அமிழ்தெனுஞ் சாவா மருந்தழகுத்
தமிழ்! அது முருகெனும் பாவலனே!
முக்குண நிலையிலும் முழுமுதலே
முழுமன தோடுனைத் தொழுவேனே!
விக்கலி.ன் எல்லையும் விரைமலர்த்தான்
விளங்கிடும் பேரருட் கழுவேனே!
சன்னிதி வாழ்சிவ சண்முகனே!
சற்குரு வேயருள் விண்மகனே!
மன்னவை வைத்திடு மாதவனே!
மனவிருள் போக்கிடும் ஆதவனே!
கண்ணுக்கு நேரெதிர் வருபவனே!
கைநிறை யஅருள் தருபவனே!
விண்ணுக் கழைத்தெனைச் செல்பவனே!
வேதனை யாணவம் வெல்பவனே!
காவடி காணக் களிப்பவனே!
கரகமென் றுற்கண் விழிப்பவனே!
பூவடி மண்தீக் குளிப்பவனே!
புன்மையைக் கண்டுளம் சுழிப்பவனே!
அன்பினில் விளையும் முருகையா!
அடியவர் துயர்கண் டுருகையா!
இன்தமிழ் தந்திடு குமரேசா!
இணைமலர் பாடிடும் எனக்கோசா?
மின்புரை ஒளிவே லாயுதனே!
மேல்வினை வெயிலெனக் காயுதெனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

அன்பொடு ஆட்கொண் டருள்முருகா!
அடிபணி தவமெனக் கருள்குமரா!
ஆறுமுகப் பங்கயம் மலர்குகனே!
அளிகள்பன் னிரண்டவை யலர்குகனே
குறுகுறு பாதங்கள் நாளமையா!
கோல மயிலிலே யாகுமையா!
ஒருதொடை மலருஞ் செங்குமுதம்
ஒருதொடை யலருங் கருங்குமுதம்
இருதொடை யெனப்பெண் ணிருத்திணைநீ
இனியவர்க் இன்பம் அருத்திணைநீ!
அலையலை யாகும் அருள்நீரே!
ஆங்கதிற் படிவீர் மருளீரே!
நிலைபெறு மாறுள முருகீரே!
நின்மலன் திருவருள் பருகீரே!
தாமரைப் பொய்கையிற் குளித்திடலே
தமிழ்த்தலை வாநமக் களித்திடுவாய்!
நாமுறு பவச்சூ டொழித்திடுவாய்!
நற்கதிப் பேறெமக் களித்திடுவாய்!
சேவற் குரலோ குருநாதா!
சேவடிக் கழைத்திடும் குருநாதா!
ஆவ லளிப்பது குருநாதா!
அழகு மயில்சிவ குருநாதா!
பொன்னும் புகழுந் தருமுருகா!
புண்ணியர் போற்றும் திருமுருகா!
விண்ணும் வீடும் விரலசைவில்
விதித்திடும் தெய்வக் குருமுருகா!
வேலே கண்டே னுன்பாலே!
விந்தையைக் கண்டே னென்பாலே!
சேலே விழியுமை தன்பாலே
சேர்த்திடும் பரம சிவன்பாலா!
இச்சா ஞானக் கிரியைவள்ளி
எழில்வேல் தேவ யானையென
வைச்சாய் ஞானக் குருபரனே!
வாழிய நின்புகழ் வாழியவே!

70826



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசீர்வாதம் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org